விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26

ஒலி 306 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 04 செவ்வாய்க்கிழமை (21.10.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## வடக்குப் பாடசாலைகள் வழமைபோல் இன்று இயங்கும்

### ஆளுநர் செயலகம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் பாடசாலைகள் இன்று வழமை போல் இயங்கும் என வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் தெரிவித்துள்ளது.

இன்றைய தினம் பாடசாலை விடுமுறை தினமா? என்ற கேள்வி மாணவர்கள் மத்தியிலும் ஆசிரியர்கள் மத்தியிலும் எழுந்துள்ளது.

இதனால் மாணவர்களும் ஆசிரியர்களும் குழப்ப

15ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சிக்கு அழைத்து வரப்பட்ட செவ்வந்தி; அடைக்கலம் கொடுத்த இருவர் கைது

(கிளிநொச்சி)

கணேமுல்ல சஞ்சீவவின் கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரான இஷாரா செவ்வந்திக்கு அடைக்கலம் கொடுத்த இருவர் கிளிநொச்சியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இஷாரா செவ்வந்தி கணேமுல்ல சஞ்சீவ கொலைக்குப் பின்னர் இலங்கையில் பதுங்கியிருந்த இடங்களில் பொலிஸார் விசேட சோதனைகளை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் இரவு இஷாரா செவ்வந்தி கிளிநொச்சிக்கு அழைத்து வரப்பட்டிருந்தார்.

இதேவேளை கிளிநொச்சி

15ஆம் பக்கம் பார்க்க



## அதிகார துஷ்பிரயோகத்தில்

# பொலிஸ் அதிகாரிகள் ஈடுபடக்கூடாது

### யாழில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய

*(யாழ்ப்பாணம்)*

பொலிஸ் அதிகாரிகள் அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபடக் கூடாது என பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)



## யாழ்.போதனா படுகொலையின் நினைவேந்தல் இன்று

(யாழ்ப்பாணம்)

இந்திய இராணுவத்தினரால், யாழ்.போதனா வைத்தியசாலையில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டவர்களது 38ஆவது

15ஆம் பக்கம் பார்க்க

## ஐரோப்பா செல்வதே கனவு சஞ்சீவ கொலைக்கு அதற்கே உதவினேன்

### விசாரணையில் இஷாரா செவ்வந்தி

07ஆம் பக்கம் பார்க்க

## வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர் நாயகமாக கோகுலரங்கன் பதவியேற்பு

(கொழும்பு)

இலங்கை வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர் நாயகமாக (Director general) இரட்ணசிங்கம் கோகுலரங்கன் இன்று (21) பதவியேற்கவுள்ளார்.

பளையைச் சொந்த இடமாகக் கொண்ட இவர்,

15ஆம் பக்கம் பார்க்க



## சாவகச்சேரி தக்ஷியை ஏமாற்றியே நேபாளம் அழைத்துச் சென்றேன்

### சி.ஐ.டியிடம் செவ்வந்தி வாக்குமூலம் சிங்களம் தெரியாததால் ஆபத்தில் சிக்கிய தக்ஷி

(கொழும்பு)

சாவகச்சேரியைச் சேர்ந்த தக்ஷியை ஏமாற்றியே நேபாளம் அழைத்துச் சென்றேன் எனப் பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினரிடம் இஷாரா செவ்வந்தி வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

இஷாரா செவ்வந்தியிடம் நடத்தப்பட்ட விசாரணையில், இஷாராவின் முகத்திற்கு ஒத்த

15ஆம் பக்கம் பார்க்க

## குற்றச் செயற்பாடுகள் ஊடாக சொத்துக்கள் ஈட்டப்படுதல் தொடர்பான விசாரணைப் பிரிவு

### யாழ்ப்பாணத்தில் நேற்றுத் திறப்பு

(யாழ்ப்பாணம்)

குற்றச் செயற்பாடுகளின் ஊடாக ஈட்டப்பட்ட சொத்துக்கள் தொடர்பான விசாரணைப் பிரிவு நேற்று யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டுள்ளது.

பழைய பொலிஸ் தலைமையகக் கட்டடத்தில் நிறுவப்பட்டுள்ள இந்தப் பிரிவு, நேற்று காலை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தலைமையில் திறக்கப்பட்டது.

15ஆம் பக்கம் பார்க்க

## 3 இலட்சத்து 59 ஆயிரம் போதை மாத்திரைகளுடன்

### வவுனியாவில் இளைஞன் கைது

(வவுனியா)

வவுனியாவில் மூன்று இலட்சத்து 59 ஆயிரம் போதை மாத்திரைகளுடன்

15ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சி அக்கராயனில் இளம் குடும்பஸ்தர் வெட்டிக் கொலை

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயனில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிக் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி அக்கராயன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஸ்கந்தபுரம் ஈச்சங்குளம் பகுதியில் நேற்று அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழ்.போதனா வைத்தியசாலையில்

# நீரிழிவு சிகிச்சை நிலையத்தின் சேவைகள் மேலும் விரிவாக்கம்



யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சை மையம் தற்போது வெளிநோயாளர் கட்டிடத் தொகுதியின் முதலாம் மாடியில் இயங்கிவருகிறது.

இந்த மையத்தின் சேவைகளை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில் தற்போது இது வெளிநோயாளர் மற்றும் விபத்து சிகிச்சை கட்டிடத் தொகுதிகளுக்கு இடையிலான பகுதியில் இரத்தப் பரிசோதனை மாதிரிகளை வழங்கும் பகுதி இடமாற்றம் செய்யப்பட்டு செயற்படத் தொடங்கியுள்ளது.

இந்த மாற்றத்தின் மூலம் நோயாளிகளுக்கு ஏற்படும் நெரிசல்கள் குறைக்கப்படுவதுடன் பரிசோதனைகளுக்காக இரத்த மாதிரிகளை வழங்கும் நபர்கள் இலகுவாக இப்பகுதியில் தேவையான சேவைகளைப் பெற முடிகின்றது.

தினசரி 200 க்கும் மேற்பட்ட நோயாளிகள் இலகுவாகவும் முறையான முறையிலும் சேவைகளைப் பெறக் கூடிய சூழல் இங்கு உருவாகியுள்ளது.

ஆகவே இரு இடங்களில் சேவைகள் வழங்கப்படுகிறது.

மேற்படி நீரிழிவு சிகிச்சை நிலையத்தில் இதுவரை 40 ஆயிரம் பேர் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

புதிதாகப் பதிவாகும் நோயாளி ஒருவருக்கு அனைத்துவிதமான பரிசோதனைகள் (Screening) மேற்கொள்ளப்பட்டு, அதன் அடிப்படையில் சிகிச்சை வழங்கப்படுகிறது.

பின்னர் வருடந்தோறும் நடைபெறும் பரிசோதனையின் (Annual Screening) மூலம் சிக்கல்களின் வளர்ச்சி நிலை மதிப்பீடு செய்யப்படுகின்றது. தேவைப்பட்டால் சிகிச்சை முறையிலும் மாற்றங்கள் செய்யப்படுகின்றன.

கடந்த 15 வருடங்களாக, இச்சிகிச்சை மையத்திற்கு சர்வதேச மருத்துவ சுகாதார நிறுவனம் (International Medical Health Organization – USA) தொடர்ந்து மேலதிக அனுசரணைகளும் ஆதரவுகளும் வழங்கி வருகின்றது.

இவ்வாறு நீடித்த பங்களிப்புகள் இந்நிலையின் வளர்ச்சிக்கும் நோயாளிகளுக்கான தரமான சேவைகளுக்கும் பெரும் பங்களிப்பாக உள்ளன. (ம-7)

### ஜனாதிபதி அநுரவுடன்

# பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனம் சந்திப்பு



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனத்துக்கும் இடையிலான சந்திப்பு நேற்று (20) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

கடந்த காலத்தில் பல்வேறு காரணங்களினால் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு பாடநெறிகளில் ஏற்பட்ட தாமதங்கள் மற்றும் அவற்றை குறித்த காலத்தில் நிறைவு செய்ய முடியாமை காரணமாக பல்கலைக்கழகக் கட்டமைப்பில் உருவாகியுள்ள சிக்கல்கள் மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் முகங்கொடுக்கும் சவால்கள் தொடர்பிலும் இங்கு பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனத்தின் பிரதிநிதிகள் ஜனாதிபதிக்குத் தெளிவுபடுத்தினர்.

அவ்வாறு தாமதமான பட்டப்படிப்புகளின் தரத்தைப் பாதுகாத்து, அவற்றை விரைவில் நிறைவுசெய்யவும் இதுவரை முடிக்கப்படாத பணிகளை திறம்பட முடிக்கவும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்தத் தேவையான திட்டத்தைத் தயாரித்து சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி இங்கு பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனத்திற்குப் பணிப்புரை விடுத்தார்.

அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தேவையான வசதிகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றும் குறிப்பிட்டார். (ம-7)

# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 23 - 07 - 1944 | 20 - 10 - 2025 |



## சிவசுப்பிரமணியம் அரியமலர்

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் உயரப்புலம் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் - அரியமலர் அவர்கள் நேற்று (20.10.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குருசாமி - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பையா - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் சசிகலா, சந்திரலீலா (ஆசிரியர் - யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்), திருக்கேதீஸ்வரன் (சங்கரப்பிள்ளை புடவையகம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், சாந்தகுமார், கந்தசாமி, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற குணசீலனின் அன்பு மாமியாரும் குருபரன், ஸ்ரீபரன், துஷ்யந்தி, சஜீபரன், சுஜித்தா, அபிராமி, ஐங்கரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2025) செவ்வாய்க் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக எருக்கலம்பிட்டி (காக்கைதீவு) இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

(5693)

தகவல் - குடும்பத்தினர்
077 664 8078, 077 172 8334


பல ஆயிரம் கடந்த பதிவுகள்...

பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்

உங்கள்
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
உலகின் எப்பாகத்திலிருந்தும் தொடர்புகொள்ள

www.kalyanamalai.lk

இணையத்தளத்தைப் பாருங்கள்
பதிவுக்கட்டணம் : 4000/= மட்டும்



தொடர்பு - கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 720 1005
076 097 3120
Email : Kalyanamalai.jaffna@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.உள்ளிட்ட கடற்பகுதிகளில் பலப்படுத்தப்படும் பாதுகாப்பு

## புலனாய்வு தகவல்களை அடுத்து பாதுகாப்பு அதிகாரிகள் தீர்மானம்

(கொழும்பு)

**பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் நாட்டை விட்டுத் தப்பியோடவும் போதைப்பொருள் உள்ளிட்ட பல்வேறு கடத்தல்களுக்காக அதிகளவில் கடல்வழி மார்க்கங்களை பயன்படுத்துவதாக புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

அதன்படி யாழ்ப்பாணம், சிலாபம், தெவுந்தர உள்ளிட்ட ஐந்து கடல்வழி மார்க்கங்களை குறிவைத்து பாதுகாப்பைப் பலப்படுத்த பாதுகாப்பு அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

குறித்த கடற்பரப்புகளில் கடற்படை மற்றும் விமானப் படை பாதுகாப்பையும் தீவிரப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

படகுகளை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் ஆட்கடத்தல்கள் மீண்டும் அதிகரித்துள்ள நிலையில் யாழ்ப்பாணம் மற்றும் சிலாபம் கடற்பரப்புகளை இலக்குவைத்து குறித்த ஆட்கடத்தல் வியாபாரங்கள் அதிகரித்துள்ளதாகப் பாதுகாப்பு அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, இந்தியா மற்றும் இலங்கை இடையே இடம்பெறும் போதைப்பொருள் உள்ளிட்ட கடத்தல்களும் அதிகரித்துள்ளதாகப் புலனாய்வு தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாதாள உலகக் குழு உறுப்பினர் கணேமுல்ல சஞ்சீவ கொலை தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ள இஷாரா செவ்வந்தி மற்றும் குழுவினர் படகு மூலம் நாட்டைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளமை தெரிய வந்துள்ளது.

இந்நிலையில், இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கடல்வழியாக மஞ்சள் மற்றும் இஞ்சி கடத்தலும் அதிகளவில் இடம்பெறுவதாக அண்மையில் செய்திகள் வெளியாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

## வாகன முன்பதிவுகள் ஏற்றம்

(கொழும்பு)

இலங்கையின் வாகன முன்பதிவுகள் கடந்த மாதத்தில் உயர்வை, பதிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பைத் தளமாகக் கொண்ட தனியார் நிறுவனமொன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கடந்த ஓகஸ்ட் மாதத்துடன் ஒப்பிடுகையில் செப்ரெம்பர் மாதம், வாகன முன்பதிவுகள் 27 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி)

## இலங்கை சிறைச்சாலைகளில் 826 மரணதண்டனைக் கைதிகள்

(கொழும்பு)

மரணதண்டனை விதிக்கப்பட்ட 826 கைதிகள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்களில், 805 ஆண் கைதிகளும் 21 பெண் கைதிகளும் உள்ளனர் என்று சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் ஜகத் வீரசிங்க தெரிவித்தார்.

மரண தண்டனைக்கு எதிராக மேல்முறையீடு செய்த 387 ஆண் கைதிகளும் 06 பெண் கைதிகளும் உள்ளனர். அதைவிட 36,000 இற்கும் மேற்பட்ட கைதிகள் உள்ளனர்.

36 சிறைகளில் 36,000 இற்கும் மேற்பட்ட கைதிகள் உள்ளனர், அவர்களில் சுமார் அறுபத்தைந்து சதவீதம் பேர் போதைப்பொருள் குற்றச்சாட்டை எதிர்கொள்கின்றனர்.

சிறைச்சாலைத்துறை ஒரு கைதிக்கு ஒரு நாளைக்கு சுமார் ரூ. 1400 செலவிடுகிறது. (நி)

### தீபாவளி தினத்தை முன்னிட்டு

## 26 இலட்சத்திற்கும் அதிகமான அகல் விளக்குகள் ஏற்றி உலக சாதனை

(டில்லி)



உலகம் முழுவதும் இன்று தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படுகிறது. தீபாவளி பண்டிகையையொட்டி அயோத்தியின் சரயு நதிக்கரையில் ஒவ்வொரு ஆண்டும் இலட்சக்கணக்கான தீபங்கள் ஏற்றி வழிபாடு நடத்துவது வழக்கம்.

இந்த நிலையில், உத்தரப் பிரதேசத்தின் அயோத்தி நகரில் சுற்றுலாத்துறை, மாநில அரசு மற்றும் அயோத்தி மாவட்ட நிர்வாகம் ஆகியவை இணைந்து மகாதீபத்திரு விழாவை நேற்று முன்தினம் நடத்தியது.

இதன்போது சரயு ஆற்றின் கரையில் 26,17,215 இலட்சம் அகல் விளக்குகள் ஏற்றி உலக சாதனை படைக்கப்பட்டது. திரளான மக்கள் கலந்து கொண்டு தீபங்களை ஏற்றினர்.

உத்தரப் பிரதேசத்தின் முதல் அமைச்சர் யோகி ஆதித்யநாத், 26 இலட்சத்திற்கும் அதிகமான விளக்குகளை ஏற்றியமைக்கு கின்னஸ் உலக சாதனைக்கான சான்றிதழ் பெற்றார்.

இந்த நிகழ்ச்சியில் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளைச் சேர்ந்த 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## எரிபொருள் கொடுப்பனவு வேண்டாம்! பிரதமர் உட்பட 48 எம்.பிக்கள் கோரிக்கை

(கொழும்பு)

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய உட்பட 48 பாராளுமன்ற உறுப்பினர்கள், தமக்காகப் பாராளுமன்றத்தால் வழங்கப்படும் எரிபொருள் கொடுப்பனவை நிறுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பாராளுமன்ற உதவிப் பொதுச் செயலாளரும் தகவல் அதிகாரியுமான ஹன்ச அபேரத்ன இந்த விபரங்களை வழங்கியுள்ளார்.

அதன்படி, இந்த 48 பேரில், 13 பேர் கடந்த மார்ச் மாதம் முதல் தமது கொடுப்பனவை நிறுத்துமாறும், 16 பேர் ஏப்ரல் மாதம் முதல் நிறுத்துமாறும் கோரியுள்ளனர்.

மீதமுள்ளோர் மே, ஜூன், ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் இருந்து எரிபொருள் கொடுப்பனவை நிறுத்தக் கோரியுள்ளனர்.

மேலும், அமைச்சர் மற்றும் பிரதியமைச்சர்களான இராமலிங்கம் சந்திரசேகர், வசந்த சமரசிங்க, அனில் ஜயந்த, தம்மிக பட்டபெந்தி, நாமல் கருணாரத்ன மற்றும் உபாலி சமரசிங்க ஆகியோர் கடந்த செப்ரெம்பர் மாதம் முதலே தமக்கு எரிபொருள் கொடுப்பனவு தேவையில்லை என பாராளுமன்றத்திற்கு அறிவித்துள்ளனர். (நி)

## ஆண்களிடையே அதிகரிக்கும் வாய்ப்புற்றுநோய்-நளிந்த



(கொழும்பு)

நாட்டில் ஆண்களே அதிக வாய்ப் புற்றுநோய்க்கு முகம் கொடுப்பதாகச் சுகாதார அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இலங்கை பல் மருத்துவ சங்கத்தின் புதிய தலைவராக மருத்துவர் ஆனந்த ரத்நாயக்க நியமிக்கப்பட்ட நிகழ்வில் கலந்துகொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை சுகாதாரத் துறை பல துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்கள் மற்றும் வயது வந்தவர்கள் பல் நோய்களால் பாதிக்கப்படுவது அடையாளம் காணப்பட்டுள்ளது.

எனினும் இந்த நிலைமைகளிலிருந்து குழந்தைகள் மற்றும் மக்களைப் பாதுகாக்கவும் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகளில் சுகாதார கல்வித் திட்டங்களைச் செயற்படுத்த வேண்டும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

வாய்ப்புற்றுநோயைத் தடுப்பதற்காக முன்கூட்டியே நோயைக் கண்டறியும் அவசியத்தையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் உயர்தர சுகாதார சேவை செயற்பட்டு வருவதுடன் தற்போதைய பல் சம்பந்தமான மருத்துவத்தை அனைவரும் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் மேலும் மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.


இந்த நாட்டு மக்களை நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வைப் பெற்றுக் கொள்ளும் மக்களாக மாற்றச் சுகாதார அமைச்சகம், நிபுணர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து பணியாற்ற வேண்டும் என்று அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# முதலாவது ஒருநாள் போட்டியில் அவுஸ்திரேலியா அபார வெற்றி

**இந்திய மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.**



இந்திய கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் மற்றும் ஐந்து ரி-20 போட்டிகளில் விளையாட உள்ளது. இதில் இவ்விரு அணிகளும் இடையேயான முதல் ஒருநாள் போட்டி பெர்த்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

குறித்த போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ். திரேலிய அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

இதற்கமைய இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடிவந்த நிலையில் போட்டியின் இடைநடுவே மழை குறுக்கிட்டது.

இதனையடுத்து குறித்த போட்டி 26 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 26 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் கே.எல்.ராகுல் 38 ஓட்டங்கள் அதிகபட்சமாகப் பெற்றுக்கொடுத்தார்.

இந்தநிலையில் டக்வோர்த் லூயிஸ் முறைப்படி அவுஸ்திரேலிய அணிக்கு 131 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

பின்னர் வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 21.1 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலிய அணியின் சார்பில் மிட்செல் மார்ஷ் 46 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

இதற்கமைய 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் அவுஸ்திரேலிய அணி 1-0 என்ற அடிப்படையில் முன்னிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## மகளிர் உலகக் கிண்ணம்

# போராடி வீழ்ந்த இந்திய அணி; 4 ஓட்டங்களில் தவறிய வெற்றி




13 ஆவது மகளிர் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெற்று வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 8 அணிகளும் தங்களுக்குள் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் 4 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும்.

இந்நிலையில், இந்தூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் இந்தியா, இங்கிலாந்து அணிகள் மோதின. நாணய சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் துடுப்பொடுத்தாடிய இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 8 விக்கெட்டுக்கு 288 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணியின் ஹீதர் நைட் சிறப்பாக ஆடி சதமடித்து 109 ஓட்டங்கள் எடுத்தார். எமி ஜோன்ஸ் அரை சதம் கடந்து 56 ஓட்டங்கள் எடுத்தார்.

இந்தியா சார்பில் தீப்தி சர்மா 4 விக்கெட்டும், ஸ்ரீ சரனி 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதையடுத்து, 289 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி களமிறங்கியது. ஸ்மிருதி மந்தனா, ஹர்மன் பிரித் கவுர், தீப்தி சர்மா அரை சதம் கடந்தனர்.

இறுதியில் இந்திய அணி 6 விக்கெட்டுக்கு 284 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன்மூலம் இங்கிலாந்து அணி 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது. புள்ளிப் பட்டியலில் 2ஆவது இடத்துக்கு முன்னேறிய இங்கிலாந்து அரையிறுதிக்கு தகுதிபெற்றது. (3)

# முத்தரப்பு தொடரில் விலகிய ஆப்கானிஸ்தான் புதிய அணியைச் சேர்ந்த பாகிஸ்தான்




பாகிஸ்தானில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள முத்தரப்பு தொடரில் ஆப்கானிஸ்தான் அணிக்கு பதிலாக சிம்பாப்வே அணி விளையாடுவதற்கு இணக்கம் வெளியிட்டுள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

உலக கிண்ண இருபதுக்கு 20 தொடரை இலக்கு வைத்து இந்த தொடர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த தொடரில் இலங்கை, பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய அணிகள் விளையாடவுள்ளதாக முன்னதாக அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் ஆப்கானிஸ்தானின் பாக்டிகா மாகாணத்தில் பாகிஸ்தான் நடத்திய வான் வழித் தாக்குதலில் ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் சில வீரர்கள் உயிரிழந்தனர்.

இதற்கு கண்டனத்தை வெளியிட்ட ஆப்கானிஸ்தான் அணி அந்த தொடரில் இருந்தும் வெளியேறியது.

இதனிடைய சிம்பாப்வே கிரிக்கெட்டுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் அந்த அணி விளையாட விருப்பம் வெளியிட்டதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை குறிப்பிட்டுள்ளது.

நவம்பர் 17 முதல் 29 வரை ராவல்பிண்டி மற்றும் லாகூரில் இந்தப் போட்டிகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச சிறுவர், முதியோர் தின விழா

(யாழ்ப்பாணம்)

புதிய சோனகதெரு ஜே/88 இன் முதியோர் சங்கம் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கம் என்பன இணைந்து நடத்தும் சர்வதேச சிறுவர், முதியோர் தின விழா எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

புதிய சோனகதெரு ஜே/88 கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சி.க.தம்பிராசா தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பிரதேச செயலக திட்டமிடல் பிரதிபணிப்பாளர் ந.சர்வேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் பிரதேச செயலக முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி.ஒமேஸ்காந் மேரி ஜென்சிகா, யாழ்ப்பாணம் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி.வக்ஷினி சூரியகுமார், யாழ்.பிரதேசமட்ட முதியோர் சங்கத் தலைவர் நா.சுந்தரராசா, யாழ்.மாநகரசபை 10 ஆம் வட்டார உறுப்பினர் செ.மதுசிகான், யாழ்.மாநகரசபை உறுப்பினர் ப.வசீகரன், ஜே/88 புதிய சோனக தெரு அலுவலர் திருமதி த.கீர்த்திகா, ஜே/88 புதிய சோனகதெரு பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் க.சுதாகரன் மற்றும் ஜே/88 புதிய சோனகதெரு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. எட்வின் ஜெயக்குமார் மேரிஸ்ரெலா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3)

# கந்தசஷ்டி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தான ஸ்கந்தசஷ்டி உற்சவம் நாளை புதன்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை சூரசம்கார உற்சவமும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறவுள்ளன.

தினமும் காலை 9 மணிக்கு சிவலிங்க பூஜை, 10 மணிக்கு காலைச்சாந்தி பூஜை, 10.15 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை என்பனவும் மாலை 3.45 மணிக்கு சாயரட்சை பூஜை, 4 மணிக்கு 2 ஆம் காலப் பூஜை, 4.15 மணிக்கு வசந்தமண்ட பப் பூஜை என்பனவும் இடம்பெறவுள்ளன. (3)

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 11 • 04 • 1951 |  | 18 • 10 • 2025 |

## அமரர்.திருமதி. கமலேஸ்வரி பாலசிங்கம்

தாமர் ஒழுங்கை, புலோலி வடக்கு பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி.கமலேஸ்வரி பாலசிங்கம் அவர்கள் 18.10.2025 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா பாக்கியலச்சுமி அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் லட்சுமியம்மா அவர்களின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற V.பாலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், ஜெயலட்சுமி, றஞ்சிதமலர் (அமரர்), நடராஜசுந்தரம் (அமரர்), இராஜேஸ்வரி, சோதிமலர், பத்மாவதி (ஜேர்மனி) அவர்களின் அன்புச் சகோதரியும் நேமினா (தீபா-லண்டன்), ஜனகன் (அமெரிக்கா), சத்யா (Bank) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பிரசாத் (லண்டன்), அருண் (Doctor), சிவரூபி (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமியாரும், நவியா (லண்டன்), ரூத்ரேஷ் (லண்டன்), ஆதிரையன் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், கவின் (அமெரிக்கா) இன் பாசமிகு அப்பம்மாவும், சிவானந்தம் (அமரர்), முத்துவேலு, வெற்றிவேற்பிள்ளை (அமரர்), சந்திரகாந்தன் (ஜேர்மனி), இந்திராணி அவர்களின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை புதன்கிழமை 22.10.2025 காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
T.P-077 205 8540 (சத்யா) (1666) குடும்பத்தினர்.

# மணிவிழா நாயகியை நினைவு கூர்கின்றோம்

## எம்மைவிட்டு பிரிந்த 88 ஆம் நாள் (21.10.2025)

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர் –வேண்டா
நமக்கும் அது வழியே நாம் போம் அளவும்
எமக்கென்று இட்டு உண்டு இரும்



## அமரர்.திருமதி. கணேசலட்சுமி உமாசுதன் (கணாமிஸ்)

B.A (Hons) SP.HISTORY Dip-in-Edu (MERIT), M.A (History)

தோற்றம் 21.10.1965 — மறைவு 26.07.2025

**கல்வி கற்ற பாடசாலைகள்**

தி/சண்முகவித்தியாலயம்
யா/உடுவில் மகளிர் கல்லூரி
யா/இராமநாதன் கல்லூரி
யாழ்ப்பாண பல்கலைக்கழகம் (1984-1988)

**ஆசிரிய சேவையில்**

தி/சென்மேரிஸ் கல்லூரி (1990-1995)
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி (1995-2014)
யா/மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை (2014-2021)

இம் மாநிலத்தில் பிறந்து வளர்ந்து வரலாற்று ஆசிரியையாக சாதனை படைத்து பல நல் மாணாக்கர்களை உருவாக்கி இப்பூவுலகை விட்டுப் பிரிந்த எமது குடும்ப ஒளிவிளக்கை இந்நாளில் நினைவு கூர்கின்றோம்.
அன்னாரின் ஆத்மா என்றென்றும் கல்வளை பிள்ளையாரின் பாதக்கமலத்தில் இருக்க பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"நவமகால்"
கல்வளை, சண்டிலிப்பாய்.

என்றும் உம் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் பாவனையில் இருந்து சிறுவர்களைப் பாதுகாக்க வேண்டும்

## ஆளுநர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**போதைப்பொருள் பாவனையிலிருந்து சிறுவர்களை பாதுகாக்கவேண்டும். சிறுவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் வலைப்பின்னல் உருவாக்கப்படுகின்றது. அதை உடைத்தெறிந்து அவர்களுக்கு பாதுகாப்பான சூழலை நாம் உருவாக்கிக் கொடுக்கவேண்டும். சிறுவர்கள் மீதான முதலீடு என்பது சிறப்பான எதிர்கால நாட்டுக்கான அடித்தளமாகும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.**

வடக்கு மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சர்வதேச சிறுவர் தின நிகழ்வு கிளிநொச்சி பாரதி ஸ்ரார் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில் ஆளுநர், சிறுவர்களுக்கு உடல், உள ரீதியான தண்டனைகள் வழங்கப்படக் கூடாது. சிறுவர்களை அன்பாகப் போசித்தால் சிறப்பான நாட்டை உருவாக்க முடியும். சிறுவர்களுக்கு தீங்கான எதையும் நாம் முன்னெடுக்கக் கூடாது.

கடந்த காலங்களில் பல்வேறு காரணங்களால் பெற்றோர்களை இழந்த சிறுவர்கள் இருந்தார்கள். இன்றும் விபத்துக்களால் பெற்றோர்களை இழந்து அநாதரவான நிலைக்கு சிறுவர்கள் தள்ளப்படுகின்றார்கள்.



எந்தவொரு சிறுவர்களுக்கும் ஆதரவில்லாத நிலைமை வரக்கூடாது. அவர்களின் எதிர்காலம் பாதிக்க அனுமதிக்க முடியாது. மாகாணத் திணைக்களம் சிறுவர் இல்லங்களைக் கண்காணித்து சகல சிறுவர்களையும் அரவணைத்து அவர்களை இந்த நாட்டுக்குத் தேவையான நற்பிரஜையாக உருவாக்கவேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (8)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 150 | 200 | 200 | 120-150 |
| உருளைக்கிழங்கு | 220 | 210 | 200 | 220 | -- |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 200 | 300 | 200 |
| தக்காளி | 300 | 220 | 200 | 300 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 160 | 300 | 160 | 200 |
| கோவா | 200 | 180 | 250 | 200 | -- |
| கரட் | 250 | 250 | 200 | 300 | 200 |
| பூசணி | 80 | 60 | 50 | 80 | -- |
| புடோல் | 300 | 200 | 200 | 250 | -- |
| வாழைக்காய் | 150 | 100 | 100 | 200 | 80 |
| சின்ன வெங்காயம் | 250 | 150-300 | 300 | 300 | 150-220 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 200 | 200 | 165 |
| பாகற்காய் | 500 | 500 | 500 | 500 | 500 |
| வெண்டக்காய் | 150 | 250 | 150 | 300 | 200 |
| கருணைக் கிழங்கு | 350 | 200 | 250 | 300 | -- |
| பயற்றங்காய் | 350 | 300 | 200 | 400 | 400 |
| லீக்ஸ் | 250 | 250 | 200 | 250 | 170 |
| பீற்றூட் | 160 | 120 | 150 | 150 | 100 |
| கறிமிளகாய் | 300 | 400 | 400 | 400 | 420 |
| முருங்கைக்காய் | 250 | 150 | 200 | 200 | 140 |
| போஞ்சி | 400 | 450 | 450 | 500 | 350 |
| கத்தரிதம்புள்ள | 150 | 120 | 200 | 160 | -- |
| கீரை - 1 பிடி | 150 | 60-140 | 150 | 120 | -- |
| தேசிக்காய் | 1500 | 1400 | 2000 | 1400 | -- |
| தேங்காய் (ஒன்று) | 200 | 200 | 150 | 160-220 | -- |
| இராசவள்ளி | 800 | 900 | 1000 | 800 | -- |
| வெங்காயப்பூ | 400 | 350 | 500 | 450 | -- |
| முள்ளங்கி | 100 | 150 | 150 | 200 | 100 |
| பொன்னாங்காணி | 100 | 70 | 150 | 80 | -- |
| வல்லாரை | 80 | 50 | 100 | 100 | -- |
| ஈரப்பலா | 160 | 100 | 150 | -- | -- |

# வல்வெட்டித்துறைப் படுகொலைக்கு 4.5 பில்லியன் இழப்பீடாக வழங்க வேண்டும்

## சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம்



(கரணவாய்)

இந்திய அமைதி காக்கும் படையினால் 1989 ஆம் ஆண்டு வல்வெட்டித்துறையில் மேற்கொள்ளப்பட்ட படுகொலை சம்பவத்தில் கொல்லப்பட்டவர்கள், காயமடைந்தவர்கள் மற்றும் சொத்திழப்புகளுக்காக 4.5 பில்லியன் இலங்கை ரூபா இழப்பீட்டினை வழங்க வேண்டும் என சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்டம் பரிந்துரைத்துள்ளது.

வல்வெட்டித்துறை படுகொலைச் சம்பவத்தின் போதான இழப்புகளுக்கான இழப்பீட்டு அறிக்கை வெளியீட்டு நிகழ்வு மற்றும் கடந்த மார்ச் மாதம் வெளியிடப்பட்ட வல்வெட்டித்துறை ஒரு படுகொலையின் வாக்குமூலங்களின் அறிக்கையின் நூல் வெளியீட்டு நிகழ்வும் யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தில் செயலாளர் இரா.மயூதரன் தலைமையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவின் அனுசரணையுடன் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்றிட்ட அமைப்பினரால் தயாரிக்கப்பட்டுள்ள வல்வெட்டித்துறை படுகொலை சம்பவத்தின் போது நிகழ்ந்த இழப்புகளுக்கான இழப்பீட்டு பரிந்துரை அறிக்கையினை வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு செயலாளர் ந. அனந்தராஜ் வெளியிட்டு வைத்திருந்தார்.

அவ் இழப்பீட்டு பரிந்துரை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

உயிர் இழப்பிற்கான இழப்பீடுகளை மதிப்பீடு செய்வதற்கு, இலங்கை அரசாங்கத்தினால் 2022 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட முடிவினை உதாரணமாக பின்பற்றி, ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் உயிர் இழப்பிற்கு 10 மில்லியன் இலங்கை ரூபாவை இழப்பீடாக வழங்கியதன் அடிப்படையில் வல்வெட்டித்துறை படுகொலைச் சம்பவத்தின் போது கொல்லப்பட்ட 66 பேருக்கும் 29.75 மில்லியன் ரூபா இழப்பீடாக மதிப்பிடப்பட்டுள்ளது.

காயமடைந்த 36 பேருக்கான இழப்பீடாக 1.38 மில்லியன் ரூபாவும், அழிக்கப்பட்ட சொத்துகளுக்கான இழப்பீடாக 57.59 மில்லியன் ரூபாவுமா மொத்தமாக 88.72 மில்லியன் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேற்குறித்த தொகைக்கு 1989 ஆம் ஆண்டு ஒகஸ்ட் முதல் 2025 ஆம் ஆண்டு மே மாதம் வரையான காலத்திற்கான வட்டியாக 4.43 பில்லியன் ரூபாவைச் சேர்த்து 4.5 பில்லியன் ரூபா தொகையினை இழப்பீடாக வழங்க வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.


குறித்த நிகழ்வில் வல்வைப் படுகொலை சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. (8-60)



மானிப்பாய் இந்துக் கல்லூரியின் புத்தாக்கக் கண்காட்சி கடந்த 16 ஆம் திகதி கல்லூரி அதிபர் துரைரட்ணம் திலீப்குமார் தலைமையில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.கலைஞர்கள் திறமையானவர்கள் தலைவாசல் விஜய் புகழாரம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்து கலைஞர்கள் மிகவும் திறமையானவர்கள். அவர்களிடம் தொழில் நேர்த்தியைப் பார்த்தேன். நிச்சயம் அவர்கள் ஒரு இடத்திற்கு செல்வார்கள் தங்கள் திறமையை அவர்கள் மென் மேலும் வளர்த்துக்கொள்வார்கள் என தென்னிந்திய நடிகர் தலைவாசல் விஜய் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்று வரும் கர்மா திரைப்பட படப்பிடிப்புக்காக யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள தலைவாசல் விஜய்நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ் . ஊடக அமையத்தில் ஊடக சந்திப்பொன்றினை நடாத்தி இருந்தார். குறித்த ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்.

யாழ்ப்பாணம் வருகை தருவது மூன்றாவது தடவை. இறுதியாக 8 ஆண்டுகளுக்கு முன்னர் வருகை தந்திருந்தேன். அப்போது பார்த்த யாழ்ப்பாணத்திற்கும் தற்போதுள்ளதுக்கும் நிறையவே வேறுபாடுகள் காணப்படுகிறது.

அன்பான மக்கள் , அருமையான உணவுகள் , மிக முக்கியமாக நகரம் மிகத் தூய்மையாக காணப்படுகிறது.

இலங்கைக்கு சுற்றுலா வருவோர் நிச்சயம் யாழ்ப்பாணம் வருகை தர வேண்டும். குறிப்பாக இந்தியாவில் இருந்து வருவோர். யாழ்ப்பாணத்திற்கு வருகை தர வேண்டும்.

சென்னையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு விமானம் உள்ளது. யாழ்ப்பாணம் வந்து . இங்கே பார்வையிட வேண்டிய இடங்களைப் பார்வையிட்டுக் கொண்டு . தென்னிலங்கை சென்று அங்கும் பார்வையிட்ட பின்னர் கொழும்பில் இருந்து சென்னை திரும்பக் கூடிய மாதிரியோ . அல்லது கொழும்பு ஊடாக வருகை தந்து யாழ்ப்பாணத்தில் இருந்து சென்னை திரும்பக் கூடிய வாறோ தமது பயண ஒழுங்குகளை மேற்கொள்ள முடியும்.

நான் இம்முறை யாழ்ப்பாணம் வருகை தந்தது. யாழ்ப்பாண இளைஞர்களின் முயற்சியில் உருவாகும் கர்மா எனும் படத்தில் நடிப்பதற்காக. வந்த எனக்கு அருமையான வர வேற்பு கிடைத்தது. இங்குள்ள வர்கள் அன்பாக கவனித்துக்கொண்டார்கள்.

நான் இங்கு யாழ்ப்பாணத் தமிழ் பேசி நடிப்பதில் தான் மிக கஷ்டப்பட்டேன். யாழ்ப்பாணத் தமிழ் மிகவும் அழகானது. அதனைப் பேசி நடித்ததில் மிக மகிழ்ச்சி. யாழ்ப்பாணத் தமிழ் பேச நீண்ட பயிற்சி கூட எடுத்தேன்.

நான் மீண்டும் எனது குடும்பத்துடன் யாழ்ப்பாணம் வந்து ஒரு வாரமாவது இங்கே தங்கி இருந்துவிட்டு போகணும் என திட்டமிட்டுள்ளேன் என தெரிவித்தார். (8-33)

# ஐரோப்பிய நாடொன்றுக்கு செல்வதே எனது கனவு!

## ▪ அதற்காகவே சஞ்சீவ கொலைத்திட்டத்திற்கு உதவினேன்
## ▪ விசாரணையில் இஷாரா தெரிவிப்பு

(கொழும்பு)

கெஹெல்பத்தர பத்மே ஐரோப்பிய நாடொன்றிற்கு அனுப்புவதாக வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையிலேயே இஷாரா செவ்வந்தி, பாதாள உலகத் தலைவர் கணேமுல்ல சஞ்சீவவை சுட்டுக் கொல்லும் திட்டத்தின் பின்னணியில் செயற்பட்டதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சஞ்சீவ கொலைக்கு இஷாரா எந்தப் பணத்தையும் பெறவில்லை எனவும் ஐரோப்பிய நாடொன்றுக்கு செல்வதே இஷாராவின் ஒரே கனவாக இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஷாரா செவ்வந்திக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக, ஜே.கே. பாய் என்ற நபருக்கு பத்மே 65 இலட்சம் ரூபாயை வழங்கி, போலி கடவுச்சீட்டுக்களைத் தயாரித்து இஷாராவை ஐரோப்பாவிற்கு அனுப்ப திட்டமிட்டிருந்ததாகவும் தெரியவந்துள்ளது.

சஞ்சீவ கொலைக்கு பத்மேவிடம் இருந்து எந்தப் பணத்தையும் பெறவில்லை எனவும், நேபாளத்தில் தங்கியிருக்க அவர் மாதாந்தம் தனக்கு பணம் அனுப்பியதாகவும் இஷாராவிடம் மேற்கொண்ட விசாரணைகளில் தெரிவித்துள்ளார்.

தனது சிறு வயதிலிருந்தே கெஹெல்பத்தர பத்மேவின் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புபட்டிருந்ததாக இஷாரா



வெளிப்படுத்தியுள்ளார்.

தனது கனவை நனவாக்குவதாக உறுதியளித்த பின்னர், சஞ்சீவ கொலைத் திட்டத்திற்கு பத்மே இஷாராவின் ஆதரவைப் பெற்றுள்ளார்.

இஷாரா செவ்வந்தி உட்பட நேபாளத்தில் கைது செய்யப்பட்ட 6 பேரையும் 90 நாட்கள் தடுத்து வைத்து விசாரிக்க அனுமதி பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# புதிய வாகனங்களுக்கான இலக்கத்தகடுகள் பெற 3 மாதங்கள் தேவை

(கொழும்பு)

நாட்டில் 5 மாதங்களாக வாகன இலக்கத்தகடுகள் இல்லாமல் காத்திருக்கும் 165,000 புதிய வாகன உரிமையாளர்கள் தங்கள் வாகன இலக்க தகடுகளைப் பெற இன்னும் மூன்று மாதங்கள் காத்திருக்க வேண்டியிருக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. 25 ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த ஒப்பந்தக்காரர்களின் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டமை, புதிய விலைமனு கோரல் செயல்முறை தொடர்பான சிக்கல்கள் மற்றும் பாதுகாப்பு அம்சங்களைச் சரிபார்ப்பதில் ஏற்பட்ட தாமதம் போன்றனவே இதற்குக் காரணங்கள் என்றும் தெரியவந்துள்ளது. (நி)



# கணவனும் மனைவியும் கருத்தொருமித்து வாழ வழிகாட்டும் கேதார கௌரி விரதம்

கேதாரகௌரி விரதம் புரட்டாதி மாதம் பூர்வ பக்க அட்டமியில் ஆரம்பித்து ஐப்பசி மாதத்து அபர பக்கச் சதுர்தசியில் நிறைவு பெறும்.

**சக்தி விரதங்களுள் மகத்துவமான விரதம்**

உலக மாதாவாகிய சக்தி. சிவபெருமானை நோக்கிச் சிவபூசை செய்து இந்த விரதத்தை நோற்றுப் பெரும் பேற்றினை அடைந்தாள். நினைத்ததைத் தருகின்ற சக்தி விரதங்களுள் மகிமை வாய்ந்த விரதம் கேதார கௌரி விரதமாகும்.

**இருபத்தொரு தினங்கள் அனுஷ்டிக்கும் விரதம்**

இருபத்தொரு தினங்கள் சக்தியை நினைத்து அனுஷ்டிக்கும் இந்த விரதத்தை இருபத்தொரு தினங்களும் அனுஷ்டிக்க இயலாதவர்கள் சதுர்த்தசித் தினத்திலாவது கேதார நாதரை வேண்டி அனுஷ்டிக்கலாம். இந்த விரத மகிமையை நோக்குகின்ற பொழுது சர்வமும் சிவமயமே என்ற கொள்கையுடையவர் பிருங்கி என்னும் நாமத்தையுடைய முனிவர். இவர் சிவனை வழிபடுவதற்காக சென்றிருந்த வேளை, அங்கே சிவன் தனித்திருக்காது பார்வதி, பரமேஸ்வரராக காட்சியளிப்பதைக் கண்டார்.

**"வண்டுருவில் பரமேஸ்வரரை வலம்வரும் பிருங்கி முனிவர்"**

சிவனை மட்டும் எப்பொழுதும் வணங்கி வரும் பிரங்கி முனிவர்- வண்டுருத் தாங்கி பரமேஸ்வரரை மாத்திரம் வலம் வந்து பிரதட்சணம் செய்தார்.அம்மையைத் தவிர்த்து விட்டார். முப்பத்து முக்கோடி தேவர்களும் அம்மை, அப்பா இருவரையும் வலம் வந்து நிற்க பிருங்கி முனிவர் சிவபெருமானை மாத்திரம் வலம் வந்து வணங்கி நின்றமையும் உலக மாதாவாகிய பார்வதி தேவியைப் புறக்கணித்தமையும் அம்மையை ஆத்திரங் கொள்ளச் செய்தன.

**"பிருங்கி முனிவருக்கு தேவியின் சாபம்"**

இதனால் பார்வதி தேவி பிருங்கி முனிவரை சக்தியற்றவராகவும் ஆற்றல் இல்லாதவராகவும் ஆக்கி விட்டார்.

ஆற்றலை இழந்த முனிவர் மூர்ச்சையானார். முனிவர் மூர்ச்சை தெளிந்ததும் இறைவனே! ஊன்று கோல் கொடுத்து அவரை இருப்பிடம் சேர்த்தார்.

**"தேவி வாமபாகத்தில் அமர தவம் செய்தார்."**

பார்வதி தேவியார் இவற்றையெல்லாம் கண்ணுற்று தாம் வேறாக அன்றி இறைவனின் இடப் பாகத்தில் ஒரே வடிவில் இருந்தால் இத்தகைய நிலைமை வந்திருக்காது என்பதை உணர்ந்து பூலோகம் சென்று சிவபெருமானின் உடலில் வலப்பாகத்தை வேண்டித்தவம் இயற்றினார்.

**"பரமசிவன் தேவியை வாம பாகத்தில் அமர்த்தினார்."**

கௌதம முனிவரின் ஆலோசனைப்படி உமையம்மையார் சிறந்த விரதமாகிய கேதாரீஸ்வரர் விரதத்தை முறையாக அனுஷ்டித்தார்.

பரமசிவன் எழுந்தருளி உமையம்மையைத் தமது வாம பாகத்தில் அமர்த்திக் கொண்டார். இறைவன் அர்த்த நாரீஸ்வரர் ஆயினார். பாதி ஆண் பாதி பெண் ஆகவுள்ள சிவமூர்த்தமே அர்த்த நாரீஸ்வரர் வடிவம் ஆகும்.

**"இறைவி இறைவனிடம் செய்த விண்ணப்பம்"**

அப்பொழுது இறைவி இறைவனை நோக்கி இந்த விரதத்தை முறைப்படி அனுஷ்டிப்பவர் நீண்ட ஆயுளையும், சற்புத்தர பேற்றையும் சகல செல்வங்களையும், குடும்ப சுகங்களையும் இம்மையில் பெற்ற இறுதியில் தேவரீரி திருவடித் தாமரைகளையும் அடைவதற்குத் திருவருள் புரிய வேண்டும் என வேண்டினார்.

இறைவனும்அவ்வாறு அனுக்கிரகம் செய்து தேவியோடு அர்த்த நாரீஸ்வரர் ஆகத் திருக்கைலாயரோடு எழுந்தருளினார்.

**திருவிளையாடல்**

பிருங்கி முனிவர் சிவனும் சக்தியும் ஒன்றென உணர்ந்து பழைய உருவைப் பெற்றார். சிவனும் சக்தியும் ஒன்றென உலகத்தவர்க்குக் காட்டவே இந்தத் திருவிளையாடல் நடந்தது.

**கணவனும் மனைவியும் கருத்தொருமித்து வாழ வழி காட்டுவது கேதார கௌரி விரதம்**

குடும்பத்தில் கணவனும் மனைவியும் கருத்தொருமித்து நல் வாழ்வு வாழ வேண்டியே கேதார கௌரி விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது. அடுத்து திருமண மாகாத கன்னிப் பெண்களும் தமக்கொரு நல்ல தலைவன் கிடைக்க வேண்டுமென நினைத்து அனுஷ்டித்தால் திருமணம் நிறைவேறுகிறது.


குடும்பம் சீரோடும் சிறப்போடும், செழிப்போடும் சுகத்தோடும் அமைதியுடனும் வாழ சிவசக்தி வழிபாடு மிகவும் அவசியமான தாகும்.

மதுரகவி. காரை.
எம்.பி.அருளானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# 2,400 அடி உயரத்திற்கு வெடித்துச் சிதறிய எரிமலை



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் உள்ள ஹவாய் தீவின் கிளாவியா எரிமலை கடும் சீற்றத்துடன் எரிமலைக் குழம்புகளை வெளியேற்றி வருகிறது.

கடந்த ஆண்டில் இருந்து அடிக்கடி கிளாவியா எரிமலை குழம்புகளை வெளியேற்றி வருகிறது.

கிட்டத்தட்ட 2,400 அடி உயரத்துக்கு எரிமலை குழம்புகளை வெளியேற்றியுள்ளது.

இது தொடர்பான வீடியோ இணையத்தில் வெளியாகி வைரலாகியுள்ளது. (நி)

# பேருந்து கவிழ்ந்து 17 பயணிகள் உயிரிழப்பு



(பிரேசிலியா)

பிரேசிலின் பெர்னாம்புகோ மாகாணம் ப்ரூமாடோ நகரம் சிறந்த சுற்றுலா தலமாகத் திகழ்கிறது. அங்கு சுற்றுலாப் பயணிகள் 30 பேர் ஒரு பேருந்தில் சென்றனர்.

சலோவா நகர் அருகே சென்றபோது அந்த பேருந்து திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்தது. இதனால் சாலையோரம் இருந்த மணல் மேட்டில் மோதி பேருந்து கவிழ்ந்தது.

இந்த விபத்தில் பேருந்தில் பயணம் செய்த 17 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

படுகாயம் அடைந்தவர்களை மீட்புப் படையினர் மீட்டு அருகிலுள்ள மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளித்து வருகின்றனர்.

சுற்றுலா சென்ற பயணிகள் 17 பேர் பலியானது அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (நி)

# போர் நிறு
## அப்பட்டமாக மீற
## காசாவில் சிதறிக் கிட



**(ஜெருசலேம்)** காசாவின் ரபா பகுதியில் தாக்குதல் நடத்தியுள்ள இஸ்ரேல், போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஹமாஸ் தரப்பு மீறியதால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவித்துள்ளது. இஸ்ரேல் படையினர் நடத்திய தாக்குதலில் 45 பேர் கொல்லப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

விமானப்படை நடத்திய தாக்குதலில் ஹமாஸின் அல்-கஸ்ஸாம் படைப் பிரிவின் தளபதி யஹ்யா அல்-மபூஹ் உட்பட ஆறு உறுப்பினர்கள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பினர் இடையே கடந்த இரு ஆண்டுகளாக நீடித்து வரும் போரை முடிவுக்கு கொண்டுவர உலக நாடுகள் முயற்சித்து வருகின்றன.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தலையிட்டு, 20 அம்ச திட்டத்தை வலியுறுத்தியதை அடுத்து, சில நாட்களுக்கு முன் போர் நிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டது.

# நீர்மூழ்கிக் கப்பலில் போதைப்பொருள் தாக்கி அழித்த அமெரிக்கக் கடற்படை

(வோஷிங்டன்)

போதைப் பொருட்களுடன் அமெரிக்க கடல் எல்லை நோக்கி வந்த நீர்மூழ்கி கப்பலை நேற்று முன்தினம் அந்நாட்டு கடற்படை தாக்கி அழித்ததாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்தார்.

தென் அமெரிக்க நாடுகளிலிருந்து அமெரிக்காவுக்குள் போதைப் பொருட்கள் கடத்தப்படுகின்றன.

கடல் மற்றும் சரக்கு லொறிகள் வழியாக பெரும் பாலான போதைப்பொருட்கள் அமெரிக்காவுக்குள் நுழைகின்றன.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் போதைப்பொருள் கடத்தலை தடுக்க கடும் நடவடிக்கைகளை எடுக்க உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி போதைப் பொருள் கடத்தல்காரர்கள் பரவலாக பயன்படுத்தும் கரீபியக் கடல் பாதையில் ரோந்து பணிகள் தீவிரப்படுத்தப்பட்டன.

கடந்த செப்ரெம்பரில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# றுத்தத்தை மீறிய இஸ்ரேல்!

## கிடக்கும் உடலங்கள்



...ல் ...ர் ...பு ...ல் ...ப ...க ...தி

...வருகின்

...ட்ரம்ப் ...ட்டத்தை ...து, சில ...நிறுத்த

போர் நிறுத்தம் நடைமுறையில் உள்ள நிலையில், காசாவில் மீண்டும் மோதல் வெடித்துள்ளது.

போர் நிறுத்தத்தை இஸ்ரேல் அப்பட்டமாக மீறியுள்ளதாக ஹமாஸின் மூத்த உறுப்பினர் இஸ்ஸாத் அல் - ரிஷ்க் தெரிவித்துள்ளார்.

கட்டார் மற்றும் எகிப்து தலைமையிலான மத்தியஸ்த முயற்சிகளையும் தடம் புரளச் செய்யும் முயற்சியை இஸ்ரேல் முன்னெடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேலின் தொடர் தாக்குதல் முழுமையான சரிவை நோக்கி கொண்டு செல்வதாக இஸ்ஸாத் அல் - ரிஷ்க் தெரிவித்துள்ளார். (நி)

## ...கள் ...டை

...கரீபியக் ...பணிகள் ...இருந்து

இதுவரை அப்பகுதியில் போதைப்பொருட்களுடன் வந்ததாக ஆறு கப்பல்களை அமெரிக்க கடற்படை தாக்கியுள்ளது. அவற்றில் சில வெனிசுலாவிலிருந்து வந்ததாக கூறப்படுகிறது.

ட்ரம்ப் பொறுப்பேற்ற கடந்த 10 மாதங்களில் இதுவரை, 27 போதைப்பொருள் கடத்தல்காரர்கள் கொல்லப்பட்டதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளது.


இந்நிலையில், கரீபியன் கடல் வழியாக போதைப்பொருட்களுடன் நீர்மூழ்கிக் கப்பல் வருவதாக அமெரிக்க உளவுத்துறை கடற்படையை உஷார்படுத்தியது.

அப்பகுதியில் கடந்த சனிக்கிழமை ரோந்து பணியில் ஈடுபட்ட கடற்படையினர் நீர்மூழ்கிக் கப்பலை தாக்கி அழித்தனர்.

இது குறித்து ஜனாதிபதி ட்ரம்ப் வெளியிட்ட அறிக்கை, அமெரிக்காவை நோக்கி வந்த மிகப்பெரிய போதைப்பொருள் நீர்மூழ்கிக் கப்பலை அழித்துள்ளோம்.

இந்த நீர்மூழ்கிக் கப்பல் கரைக்கு வந்திருந்தால் குறைந்தது 25,000 அமெரிக்கர்கள் உயிரிழந்திருப்பர். கடத்தல்காரர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டு அவர்களின் நாடுகளான ஈக்வடார் மற்றும் கொலம்பியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அங்கு அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நிலம், கடல் என எந்த வழியில் அமெரிக்காவுக்குள் போதைப்பொருள் கடத்தினாலும் அவர்களை சும்மா விடமாட்டேன் எனத் தெரிவித்தார். (நி)



# அடுத்த தேர்தலிலும் போட்டியிடுவேன்!

## நெதன்யாகு அறிவிப்பு



(ஜெருசலேம்)

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே 2 ஆண்டுகளாக நீடித்த போர் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் பேச்சுவார்த்தை காரணமாக நிறுத்தப்பட்டது.

நீண்ட நாட்களாக நீடித்து வந்த போரால் பொதுமக்களிடையே அவர் மீதான செல்வாக்கு சரிந்தது. மேலும் ஊழல் புகார் மற்றும் போரை நீட்டிக்காமல் அமெரிக்காவிடம் பணிந்து நிறுத்தியதற்காக அவருடைய சொந்த கட்சியினரே அவருக்கு எதிராக திரும்பியுள்ளனர்.

இந்நிலையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அங்குள்ள தொலைக்காட்சி ஒன்றுக்கு நேரலையில் பேட்டி அளித்தார்.

அப்போது அவரிடம் பத்திரிகையாளர் "அடுத்த ஆண்டு நடைபெற இருக்கும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவீர்களா?" எனக் கேள்வி எழுப்பினர். அதற்கு அவர் "ஆம் நிச்சயமாக" என பதில் அளித்தார்.

தேர்தலில் வெற்றி பெற வாய்ப்புள்ளதா என்ற கேள்விக்கு, நான் கண்டிப்பாக வெற்றி பெறுவேன் எனப் பதில் அளித்தார்.

இஸ்ரேலின் நீண்ட நாள் பிரதமராக 1996ஆம் ஆண்டில் இருந்து (தொடர்ச்சியாக இல்லாமல்) நெதன்யாகு உள்ள நிலையில் அடுத்த ஆண்டு நவம்பரில் நடைபெறவுள்ள புதிய பிரதமருக்கான தேர்தலில் அவர் போட்டியிடுவதாக அறிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

## கறுப்புப் பூனைகள் தத்தெடுக்கத் தடை



(கட்டலோனியா)

வடகிழக்கு கட்டலோனியாவில், விலங்குகள் காப்பகங்களிலிருந்து கறுப்புப் பூனைகளை தற்காலிகமாகத் தத்தெடுக்க தடைவிதிக்கப்பட்டுள்ளது.

ஹாலோவீன் காலத்தில் நிகழக் கூடிய "அமானுஷ்ய சடங்குகள்" மற்றும் தீய செயல்களைத் தவிர்க்கும் நோக்கில் இந்தத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் உள்ளூர் விலங்கு நலச்சேவை, குறித்த பூனைகள் காயப்படுத்தப்படுவதையோ அல்லது வினோதமான பொருட்களாகப் பயன்படுத்தப்படுவதையோ தடுக்க, ஒக்டோபர் 6 முதல் நவம்பர் 10ஆம் திகதிவரை கறுப்புப் பூனைகளை வளர்ப்பதற்கோ அல்லது தத்தெடுப்பதற்கோ வரும் அனைத்துக் கோரிக்கைகளும் நிராகரிக்கப்படும் என்று அறிவித்துள்ளது.

மேற்கத்தேய கலாசாரத்தில் கறுப்புப் பூனைகள் பொதுவாக சூனியத்துடனும் துரதிர்ஷ்டத்துடனும் தொடர்புபடுத்தப்பட்டாலும், ஜப்பான் மற்றும் எகிப்து போன்ற பல கலாசாரங்களில் அவை செழிப்பு மற்றும் அதிஷ்டத்தின் அடையாளமாகக் கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடும் மழையால்
## ஒருவர் உயிரிழப்பு



### 512 பேர் பாதிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நிலவும் கடும் மழையுடன் கூடிய வானிலை காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 512 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அதன்படி, கடும் மழையுடன் கூடிய வானிலை காரணமாக 123 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

குருணாகல், அநுராதபுரம் மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் அதிக பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

கடும் மழையுடன் கூடிய வானிலை காரணமாக 111 வீடுகள் சேதமடைந்துள்ளன.

இதனால் பல குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடப்பெயர்ந்துள்ளன. (நி)


# கல்யாணமாலை
## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1974- இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>உயரம்: 6'1"<br>தகைமை/தொழில்: Chartered Accountant, Agent<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: B/16147 | பிறப்பு-1994-இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>7இல்சூரிசெவ்<br>கி-பா-68 3/4<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: MBBS, Doctor<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, IT<br>தொ.இ: G/16191 |
| பிறப்பு:1984-இந்து<br>நட்சத்திரம்:ரோகினி<br>2இல்செவ்<br>கி-பா- 25 1/4<br>உயரம்:5'9"<br>தகைமை/தொழில்-A/L, Business (Own)<br>எதிர்பார்ப்பு: தகுதியானபெண்<br>தொ.இ: B/16149 | பிறப்பு-1998-இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>12இல்சூரிசெவ்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: Master of Nursing, Nurse (Canada)<br>எதிர்பார்ப்பு: Only Canada<br>தொ.இ: G/16195 |
| பிறப்பு:1987-இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>11இல்சூரிசெவ்<br>கி-பா-26 1/4<br>உயரம்:5'9"<br>தகைமை/தொழில்:Dip Course, System Administrator (கட்டார்)<br>எதிர்பார்ப்பு:தகுதியானபெண்<br>தொ.இ: B/16151 | பிறப்பு-1991-இந்து<br>நட்சத்திரம்-பூரட்டாதி<br>5இல் சூரிசெவ்<br>கி-பா- 18 3/4<br>உயரம்-5'3"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/16197 |
| பிறப்பு; 1991- இந்து<br>நட்சத்திரம்:சதயம்<br>1இல் செவ்<br>உயரம்:5'3"<br>தகைமை/தொழில்: A/L, Bakery<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: B/16153 | பிறப்பு-1980-இந்து<br>நட்சத்திரம்:ஆயிலியம்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில் - Degree<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/12570 |
| பிறப்பு: 1993- இந்து<br>நட்சத்திரம்:உத்தரம்<br>12இல்செவ்<br>உயரம்:5'10"<br>தகைமை/ தொழில்: A/L, Business<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16156 | பிறப்பு-1995-இந்து<br>நட்சத்திரம்:உத்தரட்டாதி<br>கி.பா -16<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில் - A/L<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்,வெளிநாடு<br>தொ.இ: G/15618 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 464



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## சாப்பிடுவது எப்படி?

ஒருவர் வந்தார். உங்களிடம் ஒரு விபரம் கேட்டுத் தெரிய வேண்டும் என்று வந்திருக்கிறேன்? உங்களுக்குத்தான் அது நல்லாத் தெரிந்திருக்கும் என்பது என்னுடைய நம்பிக்கை என்றார்.

எனக்கு ரொம்பப் பெருமையாக இருந்தது. "சரி... கேளுங்கள்!" என்றேன். "சாப்பிடுவது எப்படி?" என்றார். நான் ஒரு மாதிரியாக ஆகிவிட்டேன். ஏன் சார்.. இதைக் கேட்பதற்காகவா இவ்வளவு தூரம் மினக்கெட்டு வந்தீர்கள்?" என்றேன்.

"ஆமாம்... நீங்கள் அதைப் பற்றி எங்கேயாவது "படித்திருப்பீர்கள்... அல்லது கேள்விப்பட்டு இருப்பீர்கள். அதனாலே உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும் என்று நினைத்தேன்" என்றார்.

சரி... இப்படி வந்து உட்காருங்கள். நம் முன்னோர்கள் சிலர் சொல்லி வைத்திருக்கிறார்கள். அந்த முறைகளைச் சொல்கிறேன் என்று ஆரம்பித்தேன்.

விஞ்ஞானிகள் செய்தி என்றால் சொல்கின்ற காரண காரியத்தோடு இருக்கும். ஏன் எதுக்கு என்று கேட்டால் அதற்குப் பதில் இருக்கும்.

இது முன்னோர்கள் சொன்னது என்பதனாலே. இதிலே ஏன் அப்படி, எதற்காக இப்படி என்று எல்லாம் கேட்டுகொண்டு இருக்கக் கூடாது. அதெல்லாம் அனுபவத்திலே சொல்வது. அதனாலே பேசாமல் கேட்டுக்கொள்வதுதான் நல்லது. சரி அவர்கள் என்ன சொல்கிறார்கள்? சாப்பிடுவதற்கு முன்னால் கை, கால், முகம் எல்லாம் கழுவ வேண்டும். இன்றைக்கு நம்மளிலே எத்தனை பேர் இதைச் செய்கிறோம்? நின்றுகொண்டு சாப்பிடக்கூடாது. கட்டில் மேலே உட்கார்ந்து கொண்டு சாப்பிடக்கூடாது. படுத்துக்கொண்டு சாப்பிடக்கூடாது. படுத்துக்கொண்டுகூட சாப்பிடுவார்களா என்று கேட்காதீர்கள் சில பேர் அப்படியும் சாப்பிடுவது உண்டு.

சாப்பிடும்போது முதலிலே இனிப்பை சாப்பிடுங்கள். கடைசியிலே கசப்பைச் சாப்பிடுங்கள். மற்றைய சுவைகளை எல்லாம் நடுவிலே சாப்பிடுங்கள். சாப்பிடும்போது தண்ணீர் குடிக்க வேண்டாம். விக்கல் எடுத்தால் மட்டும் தண்ணீர் குடிக்கலாம். சாப்பாடுசூடாக இருக்கும் போதே சாப்பிடுங்கள். நம் உடம்புக்கு எது ஒத்துக்கொள்கிறதோ அதைச் சாப்பிடவேண்டும்.

நம் உடம்புக்கு ஒத்துக்கொள்ளாத எதையும் சாப்பிடக்கூடாது. சாப்பிடும்போது அனுபவித்து, சுவைத்துச் சாப்பிட வேண்டும். சில பேர் சாப்பிட ஆரம்பிக்கும் போதுதான் பேசவும் ஆரம்பிப்பார்கள் அது ரொம்பத் தவறு. சாப்பிடும்போது பேசக்கூடாது. அரட்டை அடிக்கக் கூடாது. சில ஆசாமிகள் எப்படி என்றால் சாப்பிட்டுக் கொண்டு இருக்கும் போது சாப்பாட்டைப் பற்றி குறை சொல்லாமல் அவர்களாலே சாப்பிட முடியாது.

**"இதை மனிதன் சாப்பிடுவானா"** என்று சொல்லிக்கொண்டே அவ்வளவையும் சாப்பிட்டு முடித்துவிடுவார்கள். அதுசரியில்லை, இது சரியில்லை என்று சொல்லிக்கொண்டே தான் சில பேர் சாப்பிடுவார்கள்.

ஆஹா! எவ்வளவு நல்லா இருக்கு என்று சொல்லிக்கொண்டே சாப்பிடுபவர்கள் குறைச்சல்!

சாப்பிடும்போது சாப்பாட்டை குறை சொல்லாமல்சாப்பிடுவது ஒரு நல்ல பண்பு. அதிக கோபத்திலே இருக்கீறீர்களா? அல்லது அதிக வருத்தத்திலே, கவலையிலே இருக்கீறீர்களா? துக்கத்திலே இருக்கீறீர்களா? அது மாதிரி சமயத்தில் சாப்பிடக்கூடாது.

எப்ப சாப்பிட்டாலும் பாதி வயிறு சாப்பாடு- கால் பாகம் தண்ணீர் மீதி கால் பாகம் காலியாகவே இருக்க வேண்டும். வயிறு முட்ட சாப்பிடுகிறேன் என்று சொல்வது தவறு,

இரவிலே சாப்பிட்ட உடனே படுத்துவிடக்கூடாது. கொஞ்ச தூரம் நடக்கலாம். இல்லை என்றால் உட்கார்ந்திருக்கலாம். அப்போதுதான் உணவு செரிக்கும்.

சாப்பிட உட்காருகிறீர்களா... அதற்கு முன்னால் உங்களுக்குப் பசிக்கிறதா என்று யோசித்துப் பாருங்கள். "பசி எடுத்த பிறகு கையை வாய்க்குக் கொண்டு போகின்றவனும், பசி அடங்குவதற்குள் கையை வாயிலிருந்து விலக்கிக் கொள்கின்றவனும் நோய்வாய்ப்பட மாட்டான்" அப்படி என்பது பெரியோர் வாக்கு.

"சாப்பிட்டது செரித்துவிட்டதா? அதன்பிறகு சாப்பிடு! உனக்கு நோயே வராது!" என்கிறார் வள்ளுவர்.

**"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்"** இவ்வளவும் கவனத்திலே வைத்துக்கொண்டு சாப்பிட்டால் எப்பவும் கவலையே இல்லாமல் வாழலாம். ஆனால் பல பேர் அப்படி இல்லை. சாப்பிடும் போது அடிப்படை விடயம் கையைக் கழுவிக்கொண்டு சாப்பிட உட்கார வேண்டும். இதைக்கூட பலபேர் செய்வதில்லை. அதுதான்... ஒரு அம்மா கவலையோடு சொன்னார். "என் பையன் சாப்பிடுவதற்கு முன்னால் கையைக் கழுவ மாட்டேன் என்கிறான்!" என்றார். அதற்கு இன்னொரு அம்மா, "அது பரவாயில்லை என் பையன் சாப்பிடுவதற்கு அப்புறமும் கையைக் கழுவ மாட்டேன் என்கிறான் என்றார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவு இல்லம் மெய்ப்பட (பகுதி 04)

IESL VC



Dream House

**இயற்கையான வெளிச்சமும் இயற்கையான காற்றோட்டமும்**

இயற்கையானவை எப்போதும் ஆரோக்கியமானவையே. இந்த உணர்வு இன்று மக்களிடையே பரவலாக ஏற்பட்டிருக்கிறது. இயற்கை சார்ந்த வாழ்க்கை முறைகளின் மீதான ஈர்ப்பு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. அதில், ஒரு இல்லம் குறித்துப்பேசும் போது இயற்கையான வெளிச்சமும் இயற்கையான காற்றோட்டமும் மிகவும் முக்கியமானவை.

மின்சாரம் தடைப்படும் நேரங்களில் பல வீடுகளில் உள்ளே தங்க முடியாத நிலை ஏற்படுகிறது. அது பகலாக இருந்தாலும் சரி. இரவாக இருந்தாலும் சரி. குறிப்பாக, எமது நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்த காலங்களில் தொடர்ச்சியான மின்வெட்டு அமுலில் இருந்தபோது. பலர் மிகுந்த அசௌகரியத்தையும் அவஸ்தையையும் அனுபவித்தார்கள்.

இதற்குக் காரணம் அந்த வீடுகளில் இயற்கையான வெளிச்சமும் காற்றோட்டமும் இல்லாமையே. வீட்டின் குடியிருப்பாளர்களின் ஆரோக்கியம், மன நிலை, மற்றும் வீட்டின் நிலைத்தன்மை ஆகியவற்றில் இயற்கையான காற்றோட்டமும் வெளிச்சமும் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

**இயற்கையான காற்றோட்டத்தின் முக்கியத்துவம்** (Importance of Natural Ventilation)

1. ஆரோக்கியமான உட்புற காற்று (Healthy Indoor Air)

வீட்டிற்குள் தேங்கி நிற்கும் காற்றில் கார்பனீரொக்சைட், தூசி, ஒவ்வாமை காரணி கள் (allergens), பக்றீரியாக்கள், மற்றும் சமையல் அல்லது சுத்தம் செய்யும் பொருட்களிலிருந்து வெளிவரும் இரசாயன வாயுக்கள் போன்ற மாசுபடுத்திகள் (pollutants) சேர்ந்து குவிகின்றன. இயற்கையான காற்றோட்டம் புதிய, தூயகாற்றை உள்ளே இழுத்து, மாசுபட்ட காற்றை வெளியேற்றி, சுவாச ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது.

2. ஈரப்பதத்தைக் கட்டுப்படுத்துதல் (Moisture Control)

சமையல், குளியல், மற்றும் சுவாசம் போன்ற செயல்களால் வீட்டில் ஈரப்பதம் உருவாகிறது. சரியான காற்றோட்டம் இல்லாவிட்டால், இந்த ஈரப்பதம் சுவர்கள் மற்றும் தளங்களில் தங்கி, பூஞ்சை (mold) மற்றும் கிருமிகள் உருவாக வழிவகுக்கும்.

இது உடல்நலப் பிரச்சினைகளையும் கட்டிடத்தின் கட்டமைப்புக்கும் சேதத்தையும் ஏற்படுத்தும். காற்றோட்டம் இதை தடுக்க, ஈரப்பதத்தைக் குறைத்துக் கட்டுப்படுத்துகிறது.

3. வெப்பநிலை மற்றும் வசதியை ஒழுங்குபடுத்துதல் (Temperature and Comfort Regulation)

காற்றோட்டம் வீட்டை இயற்கையாக குளிர்விக்க உதவுகிறது, குறிப்பாக வெப்பமான காலங்களில். குறுக்குக் காற்றோட்டம் (Cross-ventilation) மூலம் வெப்பமான காற்றை வெளியேற்றி, குளிர்ந்த காற்றை உள்ளே இழுத்து, உட்புற சூழலை வசதியாக்குகிறது.

4. துர்நாற்றங்களை நீக்குதல் (Odor Removal)

தேவையற்ற துர்நாற்றங்கள் மற்றும் தேக்கமடைந்த காற்றை வெளியேற்றி, வீட்டின் காற்றை சுத்தமாகவும் சுறுசுறுப்பாகவும் வைத்திருக்கிறது.

**இயற்கையான வெளிச்சத்தின் முக்கியத்துவம்** (Importance of Natural Light)

1. ஆரோக்கிய நன்மைகள் (Health Benefits)

சூரியஒளி விற்றமின் D உற்பத்தியை ஊக்குவிக்கிறது. இது எலும்பு ஆரோக்கியத்திற்கும் நோய் எதிர்ப்பு சக்திக்கும் முக்கியமானது.

மேலும், இது மனநிலையை மேம்படுத்தி, மன அழுத்தம் மற்றும் பதற்றத்தை குறைத்து, சிறந்த தூக்க சுழற்சியை (sleep-wake cycle) பராமரிக்க உதவுகிறது.

2. பூஞ்சை மற்றும் பக்றீரியாவை குறைத் தல் (Reduces Mold and Bacteria)

இயற்கையான வெளிச்சம் ஒரு இயற்கை கிருமிநாசினி போல செயற்பட்டு, வீட்டில் உள்ள பக்றீரியா மற்றும் தூசிப் பூச்சிகளின் (dust mites) வளர்ச்சியைத் தடுக்கும்.

3. மின்சாரச் சேமிப்பு (Energy Savings)

பகலில் செயற்கை விளக்குகளின் தேவையைக் குறைப்பதன் மூலம், மின்சார நுகர்வும் கட்டணமும் கணிசமாகக் குறைகிறது.

4. மனநிலை மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல் (Enhances Mood and Productivity)

இயற்கையான வெளிச்சம் நிறைந்த சூழல்கள் கவனத்தை அதிகரித்து, உற்பத்தித் திறனை மேம்படுத்தி, குடியிருப்பாளர்களை மனப்பூர்வமாக உற்சாகமாக வைத்திருக்கிறது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

**இயற்கையான காற்றோட்டம் மற்றும் வெளிச்சத்தை எவ்வாறு ஏற்படுத்துவது** (How to Achieve Natural Ventilation and Light)

இயற்கையான காற்றோட்டம் மற்றும் வெளிச்சத்தைப் பெறுவதற்கு வீட்டின் வடிவமைப்பு, அமைவிடம் மற்றும் உட்புற ஏற்பாடுகள் ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும்.

1. குறுக்கு காற்றோட்டத்தை வடிவமைத்தல் (Designing for Cross-entilation):

காற்று ஒரு பக்கம் நுழைந்து எதிர் பக்கம் வெளியேறுவதற்கு வசதியாக, அறையின் எதிரெதிர் சுவர்களில் யன்னல்கள் அல்லது கதவுகளை (openings) அமைக்க வேண்டும். இது ஆழமான மற்றும் தொடர்ச்சியான காற்றுச் சுழற்சியை உறுதி செய்கிறது.

2. யன்னல்களின் சரியான நிலைப்படுத்தல் மற்றும் அளவு (Proper Placement and Size of Windows):

வீட்டின் யன்னல்களை பிரதானமாக வீசும் காற்றின் திசைக்கு (prevailing wind direction) செங்குத்தாக (perpendicular) இருக்குமாறு அமைப்பது அதிக பட்ச காற்றோட்டத்தைப் பெற உதவும்.

திறக்கக்கூடிய யன்னல்களை (operable windows) பயன்படுத்துவது, குடியிருப்பாளர்கள் காற்றோட்டத்தை தேவைக்கேற்ப கட்டுப்படுத்த உதவும்.

3. அடுக்கு விளைவு (Stack Effect) அல்லது வெப்ப மிதப்பு (Thermal Buoyancy) பயன்படுத்துதல்:-

சூடான காற்று மேலே உயர்ந்து வெளியேறவும், குளிர்ந்த காற்று கீழே உள்ள கதவுகள் வழியாக உள்ளே வரவும் வசதியாக, குறைந்த உயரத்தில் காற்று உள்ளே நுழையவும், கூரை அல்லது மேல் தளத்தில் உள்ள யன்னல்கள், ஸ்கைலைட்கள் (Sky lights) அல்லது சாய்வு துவாரங்கள் (ridge vents) வழியாக வெளியேறவும் ஏற்பாடு செய்யலாம். இது வெப்பமான காற்றைத் திறம்பட வெளியேற்றுகிறது.

4. உட்புறத் தடைகளை நீக்குதல் (Removing Internal Obstructions):

உட்புறக் கதவுகளுக்கு மேலே யன்னல்கள் (Transom windows) அமைப்பது அல்லது திறந்த தள வமைப்பைப் (open floor plan) பின்பற்றுவது, அறைகளுக்கு இடையே காற்றுத் தடையின்றி செல்ல உதவும்.

5. வெப்பத்தைக் குறைக்கும் தீர்வுகள் (Heat Reduction Solutions):

வீட்டின் சுற்றியுள்ள செடிகள், மரங்கள் போன்ற நிலப்பரப்பு ஏற்பாடுகள் (Land scaping) மூலம் நிழல் அளித்து, வீட்டின் வெளிப்புற வெப்பநிலையைக் குறைப்பது, உள்ளே நுழையும் காற்றின் வெப்பத்தைக் குறைக்க உதவும்.

**இயற்கையான வெளிச்சத்தை ஏற்படுத்த வழிகள்:**

1. யன்னல்களின் அளவு மற்றும் திசைப் படுத்தல் (Size and Orientation of Windows): சூரிய ஒளி அதிக நேரம் வீட்டிற்குள் நுழையும் திசைகளில் (பொதுவாக தெற்கு அல்லது தென்கிழக்கு) பெரிய யன்னல்களை அமைப்பது சிறந்தது.

2. யன்னல்களுக்கு திரைச்சீலைகள் (curtains) அல்லது நிழல் அமைப்புகளை (shading devices) பயன்படுத்தி, அதிக வெப்பம் மற்றும் நேரடி பிரகாசத்தைக் கட்டுப்படுத்தலாம்.

3. ஸ்கைலைட்கள் மற்றும் ஒளி சுரங்கங்களைப் பயன்படுத்துதல் (Using Skylights and Light Tunnels): கூரை வழியாக வெளிச்சத்தை உள் அறைகள் அல்லது தாழ்வாரங்களுக்குக் கொண்டு வர ஸ்கைலைட்களை (கூரை சாளரங்கள்) அல்லது ஒளி சுரங்கங்களைப் பயன்படுத்தலாம்.

**இலங்கை பொறியியலாளர்கள் சங்கம்,**
**வடக்கின் அத்தியாயம்.**

(தொடரும்)

# இராசிபலன்

21.10.2025
ஐப்பசி 04 , செவ்வாய்க்கிழமை
அமாவாசை பிற்பகல் 5.42 மணிவரை
சித்திரை முன்னிரவு 11.26 மணிவரை

சுப நேரம் 10.32-12.02 மணிவரை
இராகுகாலம் 3.02-4.32 மணிவரை
அமாவாசை விரதம்,
கேதாரகௌரி விரதம் முடிவு

சந்திராஷ்டமம்
பூரட்டாதி,
உத்தரட்டாதி.

**வளவன்**



**மேஷம்**

தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், தேகநலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.



**கடகம்**

வழிபாட்டில் ஆர்வம் கூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும்.



**துலாம்**

தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், பணப் புழக்கம் அதிகமானாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.



**மகரம்**

வர வேண்டிய பண வரவுகள் வந்து சேரலாம், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும்.



**ரிஷபம்**

பிள்ளைகளின் தேவையறிந்து செயற்படுவீர்கள், காலைப் பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், சுப காரியப் பேச்சுக்களால் முன்னேற்றம் காணும் நாள்.



**சிம்மம்**

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்.



**விருச்சிகம்**

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பொது வாழ்வில் கௌரவம் கூடும்.



**கும்பம்**

குடும்ப பொறுப்புக்கள் அதிகரிக்கும், கவலைகள் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள், வார்த்தைகளில் நிதானம் தேவை, பயணங்களின் போது அவதானம் தேவை.



**மிதுனம்**

யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.



**கன்னி**

புதிய அனுபவங்கள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கிச் சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.



**தனுசு**

குடும்ப ஒற்றுமை கூடும், செய்தொழில் மேன்மையுண்டு, பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், செவிகுளிரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.



**மீனம்**

நட்பு வட்டம் விரிவடையும் நாள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

புகழுக்கு மயங்காதே இகழ்தலில் கலங்காதே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 889





அதன் வழியாக உள்ளே வந்த வெளிச்சம் சிறிது சிறிதாக மங்கி மறைந்து கொண்டிருந்தது. நன்றாக வெளிச்சம் மங்கிச் சூரியன் அஸ்தமித்துவிட்டது என்று அறிந்த பிறகு அவன் சுரங்கப் பாதையை மறுபடியும் திறக்கத் தொடங்கினான். இப்போது மந்தாகினி அதன் சமீபமாக வந்து நின்று கொண்டாள். பாதை திறந்தது சோமன் சாம்பவன் அதனுள் இறங்கப் போனான்.

அப்போது அந்த நிலவறையில், அவனுக்கு வெகு சமீபத்தில், 'கிறீச்' என்ற நீடித்த ஓலக் குரல் ஒன்று கேட்டது. சோமன் சாம்பவன் தன் வாழ் நாளில் எத்தனையோ பயங்கரங்களைப் பார்த்தவன்தான். ஆயினும் அந்த மாதிரி அமானுஷிகமான ஒரு சத்தத்தை அவன் கேட்டதில்லை.

பேய் என்பதாக ஒன்று இருந்து அதற்குக் குரலும் இருந்தால், அது இப்படித் தான் இருக்க வேண்டும் என்று தோன்றியது. முதல் தடவை அக்குரல் கேட்டதும் சாம்பவன் தயங்கி நின்றான் அதன் எதிரொலி நிற்கும் வரையில் காத்திருந்தான். இரண்டாந்தடவை அந்த ஓலக் குரலைக் கேட்டதும் அவன் உடம்பின் ரோமமெல்லாம் குத்திட்டு நிற்கத் தொடங்கியது. மூன்றாந்தடவை இன்னும் சமீபத்தில் கேட்ட பிறகு அவனுடைய உறுதி குலைந்து விட்டது.

அந்த இருளடர்ந்த நிலவறையில் வழி துறை கவனியாமல் குருட்டாம் போக்காக ஓடத் தொடங்கினான்.

அவன் மறைந்ததும் ஊமை ராணி அந்தப் பாதையில் இறங்கினாள். சில படிகள் இறங்கிய பிறகு சமதரையாக இருந்தது. அதில் விடுவிடு என்று நடந்து போனாள். சோமன் சாம்பவன் அவள் இறங்குவதைப் பார்த்திருந்து திரும்பி வந்தாலும் அவளைப் பிடித்திருக்க முடியாது அவ்வளவு விரைவாக நடந்தாள். நரகத்துக்குப் போகும் தொலைவில்லாத இருண்ட வழியைப் போல் தோன்றியது. ஆயினும் அதற்கும் ஒரு முடிவு இருந்தது. செங்குத்தான சுவரில் முடிந்த இடத்தில் மேலே இடைவெளி சிறிது தெரிந்தது.

சில படிகளும் கைக்குத் தென்பட்டன. அவற்றின் வழியாக ஏறியபோது தலையில் திடீரென்று முட்டியது. பாதாளப் பாதையின் படிகளுக்கும், மேலே தலை முட்டிய இடத்துக்கும் நடுவில் சிறிய சிறிய இடைவெளிகள் காணப்பட்டன. அவற்றின் ஒன்றில் நுழைந்து வெளியில் வந்தாள். சுற்றிலும் பெரிய பெரிய பூத வடிவங்கள் தென்பட்டன. ஈழத் தீவில் பிரம்மாண்டமான சிலை வடிவங்களைப் பார்த்தவளானபடியால் அந்தக் காட்சி அவளுக்குத் திகைப்பை உண்டு பண்ணவில்லை. தான் வெளி வந்த பாதை எங்கே முடிகிறது என்பதை நன்றாய்க் கவனித்துக் கொண்டாள். பத்துத் தலை இராவணன் தன் இருபது கைகளினாலும் கைலையங்கிரியைப் பெயர்த்து எடுத்துக் கொண்டிருந்தான். மலைக்கு மேலே சிவனும் பார்வதியும் வீற்றிருந்தார்கள். இராவணன் மலையைத் தூக்கிய இடத்தில் கீழே பள்ளமாயிருந்தது. மேலே தூக்கி நிறுத்திய மலையை அவனுடைய இருபது கைகளும் தாங்கிக் கொண்டிருந்தன.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## பொறாமை வேண்டாமே



பண்ணையார் வாசு ரொம்ப நல்லவர். அவரிடம் கடன் கேட்டு வந்தவர்களுக்குக் கூட வட்டியில்லாமல் கொடுத்து உதவி வந்தார். அவருடைய நிலங்கள் நன்றாக விளைந்தன. செல்வமும் முறையாகப் பெருகி வளர்ந்து கொண்டிருந்தது. ஆனால் அவரது தம்பியும், தம்பி மனைவியும் அருகில் வசித்து வந்தாலும் பண்ணையாரின் ஆதரவில்தான் வாழ்ந்து வந்தனர். பண்ணையார் பிறருக்குக் கொடுத்து உதவுகின்ற செயலை வெறுத்தார். அதனால் சில தில்லுமுல்லு வேலைகளையும் செய்து வந்தார். பண்ணையாரின் மகன் சுந்தரம் எட்டாம் வகுப்புப் படித்து வந்தான். ரொம்ப நன்றாக படிப்பான். அன்று மாலை-சுந்தரம் பள்ளியிலிருந்து வந்து தன் தந்தையின் முன் தன் அரையாண்டு மதிப்பெண் பட்டியலை நீட்டினான்.

அதில், எல்லாப் பாடங்களிலும் எண்பதிற்கும் மேலாக மதிப்பெண்கள் வாங்கியிருந்தான். அதோடு கணக்கில் நூறு மதிப்பெண்கள் பெற்றிருந்தான். வகுப்பில் முதல் மாணவன் என்றும் குறிப்பிடப்பட்டுப் பாராட்டப்பட்டிருந்தது. அதைப் பார்த்த பண்ணையார் மகிழ்ச்சியடைந்தார்.

மிகவும் அப்பா! நான் நிறைய மதிப்பெண்கள் வாங்கியதற்குக் கண்ணன் சார் தான் காரணம். ஆனால், அவரது மகள் உடல் நிலை சரியில்லாமல் ஆஸ்பத்திரியில் இருக்கிறார்.

என் வகுப்பாசிரியர் கண்ணன் மிகவும் பணத்துக்கு கஷ்டப் படுகிறார் என்றான். உடனே ஆசிரியருக்கு தேவையான பண உதவிகள் செய்யச்சென்றார் பண்ணையார்.

இதனால் ஆத்திரம் கொண்ட தம்பி, "அண்ணா நான் ஊர் சுற்றி பார்க்க செல்லணும். எனக்கு பத்தாயிரம் ரூபாய் பணம் வேணும்!" என்றான்.

உடனே கொடுக்கும் படி கணக்குப் பிள்ளைக்கு கட்டளையிட்டார் பண்ணையார். ஒருவாரம் கழித்து ஊர் சுற்றித் திரும்பிய தம்பியும், தம்பி மனைவியும் குய்யோ முறையோ என வாயில் அடித்துக் கொண்டு ஓடி வந்தனர். அவர்களது வீட்டில் திருடன் புகுந்து எல்லா பொருட்களையும் திருடிச் சென்றிருந்தான்.

"தம்பி... பிறரை பார்த்து பொறாமைப் படக்கூடாது. பொறாமை எலும்புருக்கி நோய் போன்றது. நீ பொறாமைப்பட்டு ஊருக்கு போன... என்ன நடந்தது, பார்த்தியா? இனி மேல் இப்படிச் செய்யாதே!" என்றார். மனம் திருந்தினர் தம்பியும், தம்பி மனைவியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுலகில் நீங்கள் காண விரும்பும் மாற்றமாக நீங்களே இருங்கள். – மகாத்மா காந்தி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நேர்மைத்திறத்தினர் நாட்டை ஆள வேண்டும்

நாட்டை ஆட்சி செய்கின்றவர்கள் நேர்மை மிக்கவர்களாக இருப்பது மிகவும் அவசியமாகும்.

நேர்மையற்றவர்களின் கைகளில் ஆட்சி செல்லுமாயின், நாடு கந்தறுந்து போகும். மக்கள் வறுமையிலும் பஞ்சத்திலும் வாடுவர்.

அதனாலேயே நீதிநெறி தவறாத ஆட்சி நிலைக்க வேண்டும் என வாழ்த்துரைக்கப் படுகிறது.

இஃது ஒருபுறமிருக்க, அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கம் ஊழலை ஒழிப்பதிலும் போதைவஸ்து வியாபாரத்தை அடியோடு அழிப்பதிலும் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

அதிலும் பாதாள உலகக் குழுவினரை அடியோடு ஒழித்துக் கட்டுவதில் ஜனாதிபதி அநுரவின் அரசாங்கம் மும்முரமாக இருப்பதன் காரணமாக அநுரவின் ஆட்சிக்கு மக்கள் பேராதரவு வழங்கி வருகின்றனர்.

உண்மை. இந்த நாட்டில் மூலைமுடுக்கெல்லாம் ஊடுருவியுள்ள போதைப்பொருள் பயன்பாட்டுக்கு மூலகாரணம் பாதாள உலகக்குழுவினர் என்பது நிறுதிட்டமான உண்மை.

ஆக, பாதாள உலகக் குழுவினரை ஒழித்துக் கட்டினால், இந்த நாட்டில் போதைப்பொருள் தன்பாட்டில் ஒழியும்.

தவிர, பாதாள உலகக் குழுவை ஒழித்துக் கட்டுகின்ற நடவடிக்கைகளில் இலங்கைப் பொலிஸாரின் செயற்பாடுகள் முன்னேற்றகரமாக உள்ளன.

இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்ட பாதாள உலகக் குழுவினர், அதனைத் தொடர்ந்து நேபாளத்தில் இஷாரா செவ்வந்தி உள்ளிட்டவர்களின் கைது நடவடிக்கைகள் இலங்கை என்ற எல்லை கடந்து உலகம் முழுமையிலும் பேசுபொருளாகியுள்ளன.

அதிலும் செவ்வந்தியின் கைது பாதாள உலகக் குழு தொடர்பிலும் போதைவஸ்து வர்த்தகம் தொடர்பிலும் அதிர்ச்சித் தகவல்களை வெளிப்படுத்தும் எனப் பொலிஸார் தெரிவித்திருப்பதும் இங்கு ஈண்டு கவனிக்கத்தக்கது.

எதுஎவ்வாறாயினும் கைது செய்யப்பட்டுள்ள பாதாள உலகக் குழுவினரின் வாக்குமூலங்கள் போதைவஸ்து வியாபாரத்தின் சூத்திரதாரிகள் யார் என்பதை நிச்சயம் வெளிப்படுத்தும்.

அவ்வாறு சூத்திரதாரிகள் யார் என்பதை இனங்கண்டு அதனை அரசாங்கம் பகிரங்கப் படுத்தும்போது, மீண்டும் இந்த நாட்டில் மக்கள் எழுச்சி கொண்டு கோசம் எழுப்புவர்.

போதை வியாபாரத்தை பாதாள உலகக்குழு மூலம் நடத்திய; குறித்த முன்னாள் அமைச்சர்களை – முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களை – ஆட்சி அதிகாரத்தில் இருந்து கொண்டு நாட்டை படுபாதாளத்தில் வீழ்த்தியவர்களைக் கைது செய். அவர்களுக்கு மரண தண்டனை வழங்கு என்பதாக மக்களின் கோசம் இருக்கும். அப்போது தெரியும் அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்பது.

# பாதாளக் குழுவுடன் தொடர்புடைய அரசியல் வாதிகளே விமர்சனம்

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)

சட்டம் தற்போது உரிய வகையில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. எனினும், பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புடைய அரசியல் தரப்புகளே அரசியல் பழிவாங்கல் என்று விமர்சித்து வருகின்றன என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

குற்றவாளிகள், பாதாள உலகக் குழுவினர், போதைப்பொருள் வியாபாரிகள் ஆகியோரைக் கைது செய்த பின்னர் அவர்கள் வழங்கும் தகவல்களின் அடிப்படையிலேயே கைதுகள் இடம்பெறுகின்றன.

இது அரசியல் பழிவாங்கல் அல்ல. அவ்வாறு கூறிச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதைத் தடுக்க முடியாது. எவருக்கும் அநீதி இழைக்கப்படவில்லை.

சட்டத்தின் பிரகாரமே நடவடிக்கை இடம்பெறுகின்றது.

பாதாள உலகக் குழுக்களை அண்டி இருந்த தரப்புகள்தான் தற்போது அஞ்சுகின்றன.

பொலிஸாருக்குத் தேவையான வளங்களையே அரசு வழங்கி வருகின்றது. விசாரணைகளில் தலையிடவில்லை எனத் தெரிவித்துள்ளார். (ம-7)

### துறைமுகத்தில் இருந்து பரிசோதிக்கப்படாமல்

# 323 கொள்கலன்கள் விடுவிப்பு

## பாராளுமன்ற விசாரணை கோரிய எதிர்க்கட்சி

(கொழும்பு)

துறைமுகத்தில் இருந்து பரிசோதிக்கப்படாமல் 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்ட விவகாரம் தொடர்பில் பாராளுமன்ற விசாரணைக்குழுவொன்றை அமைக்குமாறு எதிர்க்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பான எதிர்க்கட்சியின் கோரிக்கை தற்போது பாராளுமன்றத்தின் நிகழ்ச்சி நிரலுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவின் தலைமையில் அண்மையில் பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான நிலையியற்குழு கூடிய போது ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொழும்புத் துறைமுகத்தில் இருந்து கட்டாயப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டியிருந்த 323 கொள்கலன்களை எதுவித பரிசோதனையும் இன்றி சட்டவிரோதமாகத் துறைமுகத்திலிருந்து வெளியேற்ற அனுமதித்த விவகாரம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு தேவையான பரிந்துரைகளை முன்வைக்கப் பாராளுமன்ற விசேட விசாரணைக் குழுவொன்று அமைக்கப்பட வேண்டுமென்று எதிர்க்கட்சியினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த மனு பாராளுமன்றத்தின் நிகழ்ச்சி நிரலில் ஐந்து நாட்கள் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன் அதன் பின்னர் பாராளுமன்றச் செயற்பாடுகள் தொடர்பான நிலையியற் குழுவின் அனுமதியின் பிரகாரம் பாராளுமன்ற செயற்பாட்டில் உள்வாங்கப்படும்.

குறித்த மனு பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படும் பட்சத்தில் அதில் கோரப்பட்டுள்ளவாறான விசேட விசாரணைக் குழுவொன்றை அமைக்கும் அதிகாரம் சபாநாயகருக்கு வழங்கப்படும். (ம-7)

### விமான நிலையத்தில் வழங்கப்படும்

# சாரதி அனுமதிக்கான கட்டணம் அதிகரிப்பு

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு வழங்கப்படும் சாரதி அனுமதிப் பத்திரத்துக்கான கட்டணத்தை 2,000 ரூபாவில் இருந்து 15,000 ரூபாவாக அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் விளக்கமளித்த வெளிவிவகார வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் போக்குவரத்து அமைச்சுடன் கலந்துரையாடிய பின்னர் அதனுடன் தொடர்புடைய வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டதாகத் தெரிவித்தார். (ம-7)

# ‘கலைமுகம்’ அமுதமலர் வெளிவந்துள்ளது

"கலைமுகம்" கலை இலக்கிய சமூக இதழின் 80 ஆவது இதழ் அமுத மலராக இருநூறுக்கும் அதிகமான பக்கங்களுடன் அறுபதிற்கும் மேற்பட்ட படைப்பாளர்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவந்துள்ளது.

கலை இலக்கியம், நாடகம், ஓவியம், சினிமா உட்பட பல்வேறு துறை சார்ந்த கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், மொழிபெயர்ப்புக் கவிதைகள், மொழிபெயர்ப்புச் சிறுகதை, நூல் மதிப்பீடுகள், பத்தி என்பவற்றுடன் இந்த இதழின் மற்றுமொரு சிறப்பம்சமாக இலங்கையின் மூத்த தமிழ் பத்திரிகையாளர்களில் ஒருவரான வீரகத்தி தனபாலசிங்கம் அவர்களுடனான விரிவான நேர்காணலின் முதலாவது பகுதியையும் தாங்கி வெளிவந்துள்ளது. (ம-7)

# இலங்கையைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர்

## மாலைதீவில் உயிரிழப்பு

மாலைதீவில்பெக்ஹோ இயந்திரம் இயக்குபவராக பணிபுரிந்து வந்த இலங்கையைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.


மாலைதீவிலுள்ள மற்றொரு தீவுக்கு பயணித்த போது, அவர் பயணித்த படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் உயிரிழந்தார்.

குருநாகல், பண்டுவஸ்நுவரப் பகுதியை சேர்ந்த டி.எம். பிரதீப் சஞ்சீவ என்ற 36 வயதுடைய, இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ம-7)

# சதுர்த்தி உற்சவம்

யாழ்.வண் வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு [illegible] மூர்த்தி பூஜை, வசந்த மண்டபப்பூஜை நடைபெற்று விநாயகப்பெருமானின் திருவீதிவலம் இடம்பெறும்என ஆதீன கர்த்தாவும், பிரதமகுருவுமாகிய சிவஸ்ரீ து. விவே[illegible]கள் தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நாட்டின் வளர்ச்சி

### பகுதி VI

27

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

இந்தியாவரை வந்த கிறிப்ஸ் அவர்கள், இலங்கையையும் தரிசித்து, ஒரு தூதுக்குழுவினைச் சந்தித்து பேச்சு வார்த்தைகள் நடாத்தி, இந்நாட்டின் அரசியல் பிரச்சினையைத் தீர்த்து வைக்க உதவ வேண்டுமென அரசாங்க சபை எதிர்பார்த்தது. இவ்வேண்டுகோள் குடியேற்ற நாட்டுச் செயலாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட பொழுது, அவர், வெற்றி கைகூடியவுடன், இலங்கையின் அரசியற்றிட்டம் பரிசீலனை செய்யப்பட்டு சீர்திருத்தங்கள் வழங்கப்படுமெனப் பதிலிறுத்தார்.

இம்மறுமொழி இலங்கையருக்குப் பூரண திருப்தி அளிக்கவில்லை. நாட்டில் போர்க் கருமங்களில் மக்களின் மன உறுதியை நிலைக்கச் செய்வதற்கு ஒரு திட்டவட்டமான பிரகடனம் இன்றியமையாததென தேசாதிபதியும், தலைமைத் தளபதியும், அமைச்சர்களும் குடியேற்ற நாட்டுக் காரியாலயத்துக்கு எடுத்துக் காட்டினர்.

இந்தியாவைப் போன்று விலாசமானதாகவும், முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் இல்லாத போதிலும், இலங்கை, ஜப்பானியப் போர் முனையில் ஒரு கேந்திர நிலையத்தை வகித்தது, என்பதை அவர்கள் உணராமலில்லை.

தூர கிழக்கில் இழக்கப்பட்ட நாடுகளை மீட்பதற்கு வாய்ப்பான போர்த் தளத்தை அமைப்பதற்கு இலங்கையே மிகவும் வாய்ப்பான நாடு.

சிங்கப்பூரும் ஹாங்காங்கும் ஜப்பானியருக்கான பின், இந்து சமுத்திரத்தில் நேச நாடுகளின் பாரமான கப்பல்கள் நங்கூரம் பாய்ச்சி நிற்கக்கூடிய ஆழ்ந்த நீரையுடைய ஒரேயொரு துறைமுகம் திருகோணமலை; தவிர போர் முயற்சிக்குத் தேவையான தேயிலை, இறப்பர் போன்ற விளைபொருட்களை இலங்கை ஈந்தது, எனும் மறுக்க முடியாத உண்மைகளை உணர்ந்த பிரிட்டன், இலங்கையரின் விருப்பத்திற்கிணங்கியது.

**1943 ஆம் ஆண்டுப் பிரகடனம்**

மேற்கூறப்பட்ட கருத்துக்களை மாத்திரமன்றி, இலங்கை எவ்விதம் அரச விசுவாசத்தோடு தம்முடன் ஒத்துழைத்ததென்பதையும் கணித்து, பிரித்தானிய அரசாங்கம், அதிக பேச்சுவார்த்தைகளின் பின், புகழ் பெற்ற 1943 ஆம் ஆண்டுப் பிரகடனத்தை மே மாதம் வெளியிட்டது. இது D. S. சேனநாயக்காவின் பெயர் பெற்ற தனிவெற்றியென நியாயத்துடன் கருதப்பட்டது.

இப்பிரகடனத்தில், போருக்குப்பின் அரசியற் சீர்திருத்தம் பற்றி விசாரணை செய்யும் சபையினர் "இலங்கைக்கு உள்நாட்டுக் குடியியல் விடயங்கள் யாவற்றிலும் பரிபூரண பொறுப்பாட்சியை" வழங்க ஆவன செய்வரென பிரித்தானிய அரசாங்கம் அறிவித்தது. இலங்கையின் வெளிநாட்டு உறவுகளையும் பாதுகாப்பையும், பிரித்தானியா தொடர்ந்து கட்டுப்படுத்தி வருமென்று வெளியரங்கமாகக் கூறப்பட்டது.

நடந்துவரும் போரைச் சீக்கிரம் முடிப்பதற்கு அதன் கண் தம் சக்தியை செலவிட்டு வந்ததனால், மேற்கூறிய விடயத்தில் நுணுக்கமான கவனத்தைச் செலுத்த முடியாமற் போனதையிட்டு பிரிட்டன் கவலை தெரிவித்தது. எனினும் போர் முடிவடைந்தவுடன் மந்திரி சபை சமர்ப்பிக்கும் அரசியற்றிட்டம், ஒரு விசாரணைச் சபையினல் அல்லது மகாநாட்டினல் பரிசீலனை செய்யப்படுமென பிரித்தானிய அரசாங்க்ம் உறுதி மொழி கூறிற்று.

வெளியிலிருந்து ஓர் அரசியற்றிட்டம் தம்மேல் திணிக்கப்படுவதைக் காட்டிலும் தாம் தயாரித்த ஒரு திட்டத்தைப் பரிசீலனை செய்ய பிரித்தானிய அரசாங்கம் ஒப்புக் கொண்டமையை, இலங்கை மந்திரிகள் ஒரு மாபெரும் வெற்றியாகக் கருதினர். அவர்கள், புது அரசியற்றிட்டத்தை தயாரிக்கும் வேலையில் உடனடியாக இறங்கினர்.

அதிஷ்டவசமாக அவர்கள், அப்பொழுது பல்கலைக்கழகத்தின் உபவேந்தராகக் கடமையாற்றி வந்த அரசியற் சட்ட வல்லுநரும், மேதையுமான சேர். ஐவர் ஜெனிங்ஸைத் தம் ஆலோசகராகப் பெறும் பெரும் வாய்ப்பினைப் பெற்றனர். அவரது உதவியுடன் மந்திரிகள், புது அரசியற்றிட்டத்தை விரைவாக வரைந்து, 1944 பெப்ரவரியில் பிரித்தானிய அரசாங்கத்தின் பரிசீலனைக்குச் சமர்ப்பிப்பதற்கு ஆயத்தம் செய்தனர்.

1945 இல் அரசாங்க சபையின் பிற்போடப்பட்ட காலவெல்லை முடிவடைந்து தேர்தல்கள் நடைபெற வேண்டியிருந்தமையினால் அமைச்சர்கள், பிரித்தானிய அரசாங்கத்தைப் போர் முடிவடையும்வரை காத்திராது, உடனடியாகத் தமது திட்டத்தைப் பரிசீலனை செய்யுமாறு அவசரப்படுத்தினர்.

இக்கருத்தினை பிரித்தானிய அரசாங்கம் ஏற்க முடிவு செய்தது. 1944 யூலை 5 இல் குடியேற்ற நாட்டுச் செயலாளர் ஒலிவர் ஸ்ரான்லி (Oliver Stanley) பிரித்தானிய பாராளுமன்றத்தில் பின்வருமாறு அறிவித்தார். "இலங்கையின் மந்திரிகள் ஒரு நகற் திட்டத்தைச் சமர்ப்பித்து, அதனை ஆலோசிக்குமாறு கேட்டிருக்கின்றனர்.

அவர்களின் சிபார்சுகளை ஆலோசனை செய்வதற்கும், இலங்கையிலுள்ள பல்வேறு சமூகத்தினரையும் அரசியற் சீர்திருத்தம்பற்றி ஆலோசிப்பதற்கும் பிரித்தானிய அரசாங்கம், ஒரு விசாரணைச் சபையினை இலங்கைக்கு அனுப்பத் தீர்மானித்துள்ளது.

மேலும் பொதுத் தேர்தலொன்றை ஏற்படுத்துவதனால் இலங்கையின் யுத்த முயற்சிக்கு ஏற்படும் தடையை நீக்குவதற்காக இலங்கை அரசாங்க சபையின் ஆயுள் மேலும் ஈராண்டுகளுக்கு நீட்டப்பட்டிருக்கிறது".

**சோல்பரி விசாரணைச் சபை**

1944 ஆம் ஆண்டு யூலை மாத அறிக்கையின் நோக்க த ை த நிறைவேற்றுவதற்குத் தகுந்த வழிவகைகளை ஆராய்ந்து ஆலோசனை கூறுவதற்காகப் பிரித்தானியப் பாராளுமன்றம், சோல்பரி விசாரணைச் சபையினை நியமித்தது.

சிறுபான்மையரின் ஆலோசனைகளை கேட்ப தற்கு விசாரணைச் சபை பணிக்கப்பட்டதை, மந்திரி சபை வரவேற்கவில்லை.

தாம் சமர்ப்பித்த திட்டத்தை நிராகரித்து, விசாரணைச் சபையை நியமித்துப் பிரச்சினையை மீண்டும் புதிதாக ஆராயப் பிரித்தானிய அரசாங்கம் வழிசெய்ததைக் கண்டு மந்திரி சபை மனம் புழுங்கியது. 1943 இல், தான் கொடுத்த வாக்கை குடியேற்ற நாட்டு மந்திரி மீறிவிட்டாரென்ற காரணத்துக்காக விசாரணைச் சபையினையொதுக்க, மந்திரிசபை தீர்மானித்தது.

இதன் காரணமாக உத்தியோக பூர்வமாக சபைக்கு முன் சாட்சியம் கொடுக்க முடியாமற் போனலும், மந்திரிகள் விசாரணைச் சபையினரை சமயோசிதமாகச் சந்தித்துத் தம் கருத்துக்களைத் தெரிவித்தனர். விசேடமாக D. S. சேனநாயக்காவும், குணத்திலக்காவும் சபையினருக்கு நாட்டின் எல்லாப் பாகங்களைத் தரிசிக்கவும், நாட்டு மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடவும் வேண்டிய ஏற்பாடுகள் அனைத்தையும் செய்தனர். அவர்கள் காட்டிய பொது அறிவு, மரியாதை, சாமர்த்தியம் என்பவைதான் ஈற்றில் பிரச்சினையை சுலபமாகத் தீர்க்க வழிகாட்டின.

சோல்பரி விசாரணைச் சபையினர், 15 வாரங்களாக இலங்கையில் தங்கியிருந்தனர். அக்காலத்தினுள் அவர்கள் நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று மந்திரிகள், சிங்களப் பிரதிநிதிகள் மற்றும் சிறுபான்மைப் பிரதிநிதிகள் யாவரினதும், அபிப்பிராயங்களைப் பகிரங்க விசாரணை மூலமும், தனித்த உரையாடல்களின் மூலமும் அறிந்தனர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்குப்...

நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இது குறித்து வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தை தொடர்புகொண்டு வினவிய வேளை, இன்றைய தினம் வடக்கில் உள்ள அனைத்து பாடசாலைகளும் வழமைபோல் இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,104)

## பணிப்பாளர்...

பளை மத்திய கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர் என்பதுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டவர்.

இந்தியா, கட்டார், இத்தாலி உள்ளிட்ட நாடுகளின் இலங்கைக்கான பதில் தூதுவராகக் கடமையாற்றிய இவர், இன்று இலங்கை வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர் நாயகமாகப் பதவியேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## சொத்துக்கள்...

2025ஆம் ஆண்டு 5ஆம் இலக்க குற்றச் செயற்பாடுகளின் ஊடாக ஈட்டப்பட்ட சொத்துக்கள் தொடர்பான விதிகளுக்கு அமைய, விசாரணை நடவடிக்கைகளுக்காக இந்தப் புதிய பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரிவின் மூலம், சட்டவிரோதமாகப் பணம், சொத்து மற்றும் மூலதனங்களை ஈட்டியது குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்படும்.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அசங்க கரவிட்ட மூன்று வருட காலத்திற்கு இந்தப் பிரிவின் பணிப்பாளராக நாயகமாக நியமிக்கப்பட்டுள்ள அதேநேரம், இப்பதவி நியமனம் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்குட்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அசங்க கரவிட்ட, குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் நிதி மோசடிக் குற்றப் பிரிவின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராகவும் செயற்படுகிறார்.

குற்றச் செயற்பாடுகளின் ஊடாக ஈட்டப்பட்ட சொத்துக்கள் தொடர்பான விசாரணைப் பிரிவின் மூலம் 34 அரச நிறுவனங்கள் குறித்த விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டும் என்று சட்டபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி, எந்தவொரு முறையிலும் ஈட்டிய மூலதனங்கள் குறித்து விசாரணை நடத்த சட்டபூர்வமாக இந்தப் பிரிவுக்கு அதிகாரம் உள்ளதுடன், குற்றம் அல்லாத சொத்துக்கள் ஈட்டல் குறித்து சிவில் வழக்குகள் தாக்கல் செய்யும் சாத்தியக்கூறும் இருப்பதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பொதுமக்களும் இந்தப் பிரிவில் நேரடியாக முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்க வாய்ப்பு உள்ளதுடன், சட்டபூர்வமற்ற முறையில் ஈட்டிய சொத்துக்களை 30 நாட்களுக்குள் தடை செய்ய அல்லது கையகப்படுத்தவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. (ம-7)

## இளம் குடும்பஸ்...

இதில் அதேபகுதியைச் சேர்ந்த கௌரிராஜன் கஜன் (வயது-24) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்தவராவார்.

முற்பகை காரணமாகவே இக்கொலை இடம்பெற்றுள்ளதாக அக்கராயன் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,315,316)

## சாவகச்சேரி...

உருவத்தைக் கொண்ட பெண் ஒருவரைத் தேடிவந்த காலப்பகுதியில் "ஜாஃப்னா சுரேஷ்" என்பவருக்குத் தக்ஷி என்ற பெண் அறிமுகமானதாகவும், வெளிநாட்டில் வேலை பெற்றுத்தருவதாகக் கூறி, தக்ஷியை ஏமாற்றி நேபாளத்திற்கு அழைத்துச் சென்றதாகவும் தெரியவந்துள்ளது.

தக்ஷி என்ற பெண்ணுக்குப் பெரிதளவு சிங்கள மொழி தெரியாததால் அவருக்கு எதுவும் கூறாமல் அவரை நேபாளத்திற்கு ஏமாற்றி அழைத்துச் சென்றதாக இஷாரா செவ்வந்தி பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளார். (ம-7)

## கிளிநொச்சி...

அம்பாள்குளம் மற்றும் உதயநகர் பகுதியைச் சேர்ந்த இருவர் இஷாராவிற்கு தங்குமிடம் வழங்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-7,316)

## யாழ்.போதனா...

நினைவுதினம் இன்று (21) நினைவுகூரப்படவுள்ளது.

1987ஆம் ஆண்டு இந்திய இராணுவம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைந்து வைத்தியசாலையில் கடமையாற்றிய வைத்தியசாலைப் பணியாளர்கள் 21 பேர் உள்ளிட்ட 68 பேரைச் சுட்டுப் படுகொலை செய்தது. இதில் பலர் படுகாயமடைந்திருந்தனர்.

சுட்டுக்கொல்லப்பட்டவர்களின் 38ஆவது நினைவு தினம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இன்றையதினம் நினைவுகூரப்படவுள்ளது.(ம-7)

## 3 இல...

இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து வவுனியா சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சோமரட்ண விஜயமுனியின் ஆலோசனையில் மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவைச் சேர்ந்த உப பொலிஸ் பரிசோதகர் விமல் பியரட்ண தலைமையிலான பொலிஸார் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போதே குறித்த போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன.

வவுனியா ஏ9 வீதி ஊடாக வவுனியா நகரை நோக்கிப் பயணித்த பொலிரோ ரக வாகனத்தை இ.போ.சபை சாலைக்கு அருகில் மறித்த பொலிஸார்விசேட சோதனையை மேற்கொண்ட போது குறித்த வாகனத்தில் கருவாட்டுக்குள் மறைத்து வைக்கப்பட்ட நிலையில்போதை மாத்திரைகள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த மாத்திரைகள் மற்றும் வாகனம் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதுடன் அதன் சாரதியும் கைது செய்யப்பட்டார்.

குறித்த வாகனத்தில் இருந்து மூன்று இலட்சத்து 59 ஆயிரம் போதை மாத்திரைகள் மீட்கப்பட்டதுடன் அதனை உடைமையில் வைத்திருந்த கற்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த 23 வயது இளைஞனும் கைது செய்யப்பட்டார்.

மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-7,250)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.10.20
சீட்டிழுப்பு இலக்கம் 5988
H 5 2 0 2 4 8
அத சம்பத
H 0 2 4 8
சீட்டிழுப்பு இலக்கம் 0563

சுப தவஸ
திகதி 2025.10.20
சீட்டிழுப்பு இலக்கம் 184
மிதுனம் 17 38 59

தன நிதானய
திகதி - 2025.10.20
சீட்டிழுப்பு இலக்கம் - 2018
B 27 28 43 44 B

மெகா பவர்
திகதி 20/10/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2336
0 22 14 32 51 65

ஜய JAYA
திகதி 2025.10.20
சீட்டிழுப்பு இலக்கம் 0256
J 0 7 9 5

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4230
சீட்டிழுப்பு திகதி 20.10.2025
G 23 51 53 58
G

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.10.20
சீட்டிழுப்பு இலக்கம் 1297
விருச்சிகம் 09 21 49 57 விருச்சிகம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
20.10.2025 வெற்றி வாரம் 0696
ஆங்கில எழுத்து C
3 8 4 6 4 2
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.26,818,086.40
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2962
சீட்டிழுப்பு திகதி 2025.10.20 தினம் திங்கட்கிழமை
45 68 73 76 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 68,710,150.40

சனிதா
திகதி 20.10.2025 வெற்றி வாரம் 5123
03 45 74 76 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,991,815.20

ஜயோதா Jayoda
திகதி 2025.10.20 வெற்றி வாரம் 2171
40 44 48 57 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 32,301,729.60

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4674
சீட்டிழுப்பு திகதி 20.10.2025 தினம் திங்கட்கிழமை
39 46 60 61
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,465,628.80

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
B 13 14 22 47 60
சீட்டிழுப்பு வாரம் 2138
20.10.2025 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.601,473,767.00

அட கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 2788
சீட்டிழுப்பு திகதி: 2025.10.20
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,000,000.00
08 54 75 76 L

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாப்பிள்ளை தேவை

01) வவுனியா - சில்லாலை, இந்து, 1993, திருவாதிரை, Bsc in civil Engneering, Australia, Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 54933

02) நல்லூர், இந்து, 2000, உத்திராடம், BBA Auditor பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 54571

03) யாழ்ப்பாணம், 1996, இந்து, அத்தம், MBBS, Doctor பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 54562

04) கோப்பாய், இந்து, 1997, ரோகினி, Masters in Businees Administration, Bank Exective officer பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 54271

05) சரவணை, இந்து, 1993, அஸ்வினி, Bsc in IT, Singapore Citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 54241

06) கரவெட்டி, இந்து, 1988, சுவாதி, Phd in Biochemistry, Germany citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 54321

07) பருத்தித்துறை - யாழ்ப்பாணம், இந்து, 1994, விசாகம், 7 செவ்வாய், A/L, Diploma, Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 54171

08) வட்டுக்கோட்டை, இந்து, 1995, திருவாதிரை, 7 செவ்வாய், U/Y Degree, Canada, Citizen, Vagitiarion பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 32804

09) கைதடி - மன்னார், Roman cathalic, 1993, A/L, UK Citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 46691

10) கொழும்பு, Roman cathalic, 1992, Diploma in IT, Project Manageer, Divorce, Singapore பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 39596

எம்மிடம் Roman Catholic மணப்பெண்களும் மாப்பிள்ளைகளும் உண்டு.

நீங்களாகவே எமது website www.thaalee.com இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். (1667)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728


## பொலிஸ் ...

யாழ்ப்பாணத்தில் குற்றச் செயற்பாடுகளின் ஊடாக ஈட்டப்பட்ட சொத்துக்கள் தொடர்பான விசாரணைப் பிரிவு நேற்று (20) பழைய பொலிஸ் தலைமையகக் கட்டடத்தில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தலைமையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் உரையாற்றிய பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய,

"சட்ட அமைப்பில் இவ்வளவு அதிகாரம் உள்ள சட்டம் எதுவும் இல்லை. பொலிஸ் அதிகாரிகளுக்கு அதிகபட்ச அதிகாரம் உள்ளது.

ஆனால் அவர்கள் அதைத் துஷ்பிரயோகம் செய்யக் கூடாது. இந்த அதிகாரத்தை பொதுமக்களின் நன்மைக்காகவும் நாட்டில் சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்யவும் பயன்படுத்த வேண்டும் என்றார். (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4155)

076 825 7716 (ஆகாஸ்)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

## வேலையாட்கள் தேவை

சிவபூமி விருட்சம்

கோண்டாவில் கிழக்கு கோண்டாவில் பகுதியில் அமைந்துள்ள சிவபூமி விருட்சத்திற்கு பூங்கன்றுகள் விற்பனை உதவியாளர்கள் தேவை.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (C-4152)

தொடர்பு : 077 844 8796

## வீடு வாடகைக்கு

இராமநாதன் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு (5694)

077 411 8851
076 882 8694

## யாழ்ப்பாணத்தில் Voyzant

விசாக்கள்



இந்தியா, அமெரிக்கா, கனடா, லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி, நோர்வே, கொலன்ட், டென்மார்க், பெல்ஜியம், மலேசியா, நியூஸ்லாந்து, அவுஸ்திரேலியா, சீனா போன்ற நாடுகளிற்கு விசா சேவைகள்

மேலதிக விபரங்களுக்கு: Voyzant(PVT)Ltd

No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
(OLR Church இற்கு அருகில்)

+94763458646, 021 222 6866 (C-4109)

## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)

வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)

சம்பளம் 30,000/- முதல் 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை (C-4156)


V2 TRAVELS
v2vacancies@gmail.com
076 1410725
076 8226236

## கடை வாடகைக்கு

மானிப்பாய் வீதி, ஆலடிச் சந்தியில் கடைத்தொகுதி வாடகைக்கு உண்டு. (5695)

077 411 8851
077 505 8561


# மரண அறிவித்தல்



பிறப்பு: 24 - 02 - 1948
இறப்பு: 20 - 10 - 2025

## சுப்பிரமணியம் சக்திவடிவேல்

தொல்புரம் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சக்திவடிவேல் அவர்கள் நேற்று (20.10.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - இரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் திலகவதி அவர்களின் பாசமிகு கணவரும், யசோதா (கனடா), யுகதேவி (லண்டன்); அமரர் Dr. சக்திபாலன், லோஜினி (பிரதிமுகாமையாளர், மக்கள் வங்கி, சுன்னாகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சசிதரன் (கனடா), ஜெயசீலன் (லண்டன்), துவாரகா (ஆசிரியர், மன்/டிலாசால் கல்லூரி, நானாட்டான்), தவகுமாரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், சங்கானை) ஆகியோரின் அன்பு மாமனாரும், அமரர்களான கணேசநாதன், செந்தில் செல்வர் மற்றும் விஜயலக்சுமி இராசநாயகம் (ஓய்வுநிலை ஆசிரியர்), காலஞ்சென்ற சத்தியதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆகாஸ், அபிலாஸ், அக்ஷயா, ஹரிஸ், ஹரித், சக்திகா, சக்திப்பிரியா, லியாசக்தி, திவ்யன், கபிஷா ஆகியோரின் அன்புப் பேரனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.10.2025) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மனைவி - 070 653 1622
மருமகன் - 077 653 1622

தகவல்: குடும்பத்தினர் (C-4154)

# மரண அறிவித்தல்



தோற்றம்: 28 - 01 - 1952
மறைவு: 18 - 10 - 2025

## உமாதேவி செல்வராசா

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் பெரியவிளான் மற்றும் வவுனியா குருமன்காடு இலக்கம் 20, 2ஆம் ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட உமாதேவி செல்வராசா கடந்த (18.10.2025) சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் செல்வராசாவின் (விநாயகர் சேவிஸ் உரிமையாளர்) அன்பு மனைவியும் சுமதி (வவுனியா), சசிதரன் (சுவிஸ்), சசிகுலம் (கொலண்ட்), ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற சின்னத்துரை - நாகம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிவகுரு - அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான அமிர்தலிங்கம், கந்தையா மற்றும் இந்திராதேவி (கனடா), இந்திராணி, இராசநாயகி, கணேஸ்வரன், நளாயினி, முருகானந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான துரைராசா, நடராசா, நவரத்தினம், முத்துராசா, இராசரத்தினம் மற்றும் தம்பிராசா, தவமணி, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனியும் சுரேஸ்குமார் (பிரான்ஸ்), செல்வராணி, கஜிதா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பிரதீபன் - ஜெயச்செல்வி, நவன், துசன், ஆரியான், பிரசான் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் தஸ்வந்தின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.10.2025) புதன்கிழமை இல.20, 2ஆம் ஒழுங்கை, குருமன்காடு, வவுனியாவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தட்சணாகுளம் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இலக்கம் 20, 2ம் ஒழுங்கை,
குருமன்காடு, வவுனியா.

தகவல்: குடும்பத்தினர் (C-4153)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org